ISSN 1391-9504

PUBLIC LIBR...

# விஜய்

Vijey විජයි

30.10.2013 - மலர் 10, இதழ் 35



## இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



## விரைவில் தென்படவுள்ள வால்வெள்ளி

## ரோமானிய கலைநுட்பங்கள்

## 45 வருடங்களில் லண்டன், நியூயோர்க் நகரங்கள் அழியுமாம்?!

## எதிரிகளை ஏமாற்றும் மாயச் சிலந்தி!

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்யோசனையுடன் செயற்படுதல்



எந்தவொரு விடயத்தையோ, செயற்பாட்டையோ செயற்படுத்துவதற்கு முன்னர், அது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும். எதுவாக இருப்பினும், நினைத்தவுடன் செய்வதோ, தொட்டவுடன் முடிப்பதோ கூடாது. அதனை நன்கு சிந்தித்து, அதன் விளைவுகளை சிந்தித்து முன்யோசனையுடன் செயற்பட வேண்டும்.

நாம் எந்தவொரு வேலையையும் திடீரென, அவசரத்துடன் செய்வதன்மூலம், சிலவேளைகளில் அதனால் ஏற்படக்கூடிய நஷ்டங்கள், இடர்பாடுகளை எம்மால் சமாளிக்கவோ, முகங்கொடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாமல் போய்விடும். இத்தகைய நிலைமைகளின் காரணமாக, உள நெருக்கடிகளும் நேர வீணடிப்புமே ஏற்படும்.



பொதுவாக, ஒரு வேலையைச் செய்வதற்கு முன்னர், அது தொடர்பாக சிந்திப்பதும் திட்டமிடுவதும் சிலவேளைகளில் நேரத்தை வீணாக்குவது போன்று சிலருக்குத் தோன்றக்கூடும். ஆனால், குறித்த ஒரு வேலையைச் செய்வதற்கு முன்னர் அத்றகாக குறுகியளவு நேரத்தை செலவழித்து, சிந்தித்து செயற்படுவதானது, நாம் செய்ய எத்தனிக்கும் வேலைக்காக பெரிதாக நேரத்தை வீணடிப்பதிலிருந்து விடுதலை பெற்றுத் தருவதாகவோ அல்லது அந்த வேலையினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை இனங்காட்டுவதாகவோ அல்லது வெற்றிக்கு வழிவகுப்பதாகவோ அமையும்.


'பதறிய காரியம் சிதறும்' என்பதற்கிணங்க, நாம் பதற்றத்துடன் வேலைகளைச் செய்யும்போது எம்மால் ஆழமாக சிந்திக்க முடியாமல் இருக்கும்; பொறுமையைக் கடைப்பிடிக்க முடியாமல் போகும். ஆகவே, பதற்றத்துடனும் அவசரத்துடனும் எந்தவொரு வேலையையும் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கல்வியைப் பொறுத்தவரையிலும் சரி; வாழ்க்கையைப் பொறுத்தவரையிலும் சரி; 'முன்யோசனை' என்பது முற்றிலும் அவசியமானது.

ஒரு வேலையைச் செய்வதற்கு முன் சிந்திப்பது என்பது, எவ்வாறு அதனைச் செய்ய வேண்டும் என்பதில் மட்டுமல்லாமல், பிரச்சினைகள் ஏற்பட்டால் அதனைத் தீர்க்க எம்மால் முடியுமா?, அதற்கான வளங்கள் எம்மிடம் இருக்கின்றனவா?, அதனை எவ்வாறு சமாளிக்க முடியும்?, எவ்வாறு முகங்கொடுப்பது போன்ற பல கேள்விகளுக்கு விடையளிப்பதாக அமையும். இவ்வாறு முன்யோசனையுடன் செயற்படுவோமானால் நாம் செய்யப்போகும் வேலை பற்றிய பயமோ, பின்வாங்கும் தன்மையோ ஏற்படாது. மாறாக, தன்னம்பிக்கையையும் மன தைரியத்தையும் எதையும் எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலையும் அது நம்மில் வளர்த்துவிடும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**


மெஜிக் உலகில்...

# நாணயக்குற்றிகளை உருவாக்குதல்




மாயாஜால வித்தைகளினூடாக, நாணயக்குற்றிகளை எவ்வாறு உருவாக்கலாம் என்று பார்ப்போம். இந்த வித்தையை செய்யும் முன்னர், நீங்கள் பார்வையாளர் ஒருவருக்கு சில நாணயங்களை வழங்கி, அவற்றைக் கணக்கிட்டு ஒரு தட்டில் இடுமாறு கூறுங்கள். அதன்பின் தட்டில் உள்ள நாணயக்குற்றிகளை பார்வையாளரின் கைகளில் கொட்டும்போது,மாயாஜால வித்தையின் காரணமாக, அந்த நாணயங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக பார்வையாளர்களை உணரச் செய்வதே இந்த வித்தையின் நோக்கமாகும்.

## தேவையானவை:



- ★ நாணயக்குற்றிகள்
- ★ பிளாஸ்டிக் தட்டு
- ★ கனமான காட்போட் துண்டொன்று (பிஸ்கட் பெட்டிகளை வெட்டிப் பெறலாம்)
- ★ பசை - (பைண்டர் கம் மிகவும் உகந்தது)

## செய்முறை:




### 1 ஆவது படிமுறை:

இங்குள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு காட்போட் துண்டொன்றிலிருந்து ஒரே அளவிலான செவ்வகத்துண்டுகள் இரண்டை வெட்டிக்கொள்ளுங்கள். படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு துண்டிலிருந்து சிறிய துண்டொன்றை வெட்டி அகற்றிக்கொள்ளுங்கள். நாணயங்களை மறைத்து வைப்பதற்கு ஏற்பவே இவ்வாறு வெட்டப்படுகின்றது.

### 2 ஆவது படிமுறை:



தற்போது பிளாஸ்டிக் தட்டினை மறுபக்கம் திருப்பி, அதன் அடிப்பகுதியில் வெட்டப்பட்ட காட்போட் துண்டை (அதாவது, துண்டொன்று வெட்டி அகற்றப்பட்ட பகுதியை) ஒட்டுங்கள். இதன்போது காட்போட் துண்டின் திறந்த பகுதியினை பிளாஸ்டிக் தட்டின் வெளித்தள்ளியிருக்கும் பகுதியை நோக்கி சற்று அண்மித்ததாக ஒட்டிக்கொள்ளுங்கள்.



### 3 ஆவது படிமுறை:

அடுத்ததாக, இரண்டாவது காட்போட் துண்டினை அதன் மீது ஒட்டிக்கொள்ளுங்கள். தற்போது நாணயக்குற்றிகளை மறைத்து வைக்கக்கூடிய ரகசிய அறை தயாராகிவிட்டது.

### 4 ஆவது படிமுறை:

மாயாஜால வித்தையைக் காட்டுவதற்கு முன்னரே, தேவையானளவு நாணயக்குற்றிகளை இந்த ரகசிய அறையில் இட்டு தட்டினை மறுபக்கம் திருப்பி வைத்துக்கொள்ளுங்கள்.

### 5 ஆவது படிமுறை:



இனிமேல்தான் வியப்பூட்டும் தருணம் ஆரம்பமாகின்றது. அதன்படி, 5 நாணயக்குற்றிகளை பிளாஸ்டிக் தட்டின் மேல் பகுதியில் வைத்துவிட்டு, அவற்றின் எண்ணிக்கையைக் கவனமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு பார்வையாளர் ஒருவரை அழைத்துக் கூறுங்கள். இதன்போது, எக்காரணம் கொண்டும் தட்டினை அசைக்க வேண்டாம்.



### 6 ஆவது படிமுறை:

அதன்பின்னர், மாயாஜால வித்தைகள் செய்வதுபோல் கைகளை அசைத்து, தட்டினை சரித்து, தட்டிலுள்ள நாணயங்களை கைகளில் கொட்டுங்கள் (இதன்போது, ரகசிய அறையிலுள்ள நாணயங்களும் கைகளில் கொட்டக்கூடிய வகையில் பார்த்துக்கொள்ளுங்கள்). என்ன அதிசயம்....! மாயாஜால வித்தையின் காரணமாக தற்போது குறித்த பார்வையாளரின் கைகளில் அதிகளவு நாணயக்குற்றிகள் இருப்பதைக் காணலாம்.


## இந்த மாயாஜால வித்தையின்போது பின்பற்றப்பட வேண்டிய உபாயங்கள்

ஒரே அளவிலான, மெல்லிய நாணயங்களைத் தெரிவுசெய்துகொள்ளுங்கள். (ஒரு ரூபா நாணயம் மிகவும் உகந்தது). ரகசிய அறையின் வாயிற் பகுதியினை நாணயத்தின் அளவுக்கு ஏற்ப வெட்டிக்கொள்ள மறக்க வேண்டாம். இல்லாவிடின், தேவையானபோது நாணயங்கள் வெளியே வராமல் இறுகிக்கொள்ளும். அத்துடன், நாணயங்களைக் கொட்டும்போது, பார்வையாளர்களின் கைப்பகுதியை நோக்கி ரகசிய அறையின் வாய்ப்பகுதி இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

-மெஜிக் மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk






## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் புகைப்படம்

### 70 புள்ளிகளுக்கு மேல் அனைவரும் அனுப்பலாம்

2013 தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் புகைப்படங்களை 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். பிள்ளைகளின் மன உணர்வுகளை நன்றாக உணர்ந்துள்ள 'விஜய்', மேற்படி பரீட்சையில் மொத்தமாக 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற அனைவரையுமே சித்தியடைந்தவர்களாகவே கருதுகின்றது. எனவே, 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் தமது புகைப்படத்துடன் தாம் பெற்ற புள்ளிகளைக் குறிப்பிட்டு, கீழ்காணும் கூப்பனை நிரப்பி, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சியையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(குறிப்பு: குழுப்படம் அனுப்புபவர்கள் தனிப்படம் மற்றும் விபரங்கள் அனுப்புவதைத் தவிர்க்கவும்)

**கூப்பன்**

பெயர்: ..............................
புள்ளிகள்: ..............................
பாடசாலை: ..............................
..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
பெற்றோர் பெயர்கள்: ..............................
தொலைபேசி இல: ..............................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதுடன், அத்தாட்சியையும் இணைத்துள்ளேன்.

..............................
அதிபர் கையொப்பமும் அத்தாட்சி முத்திரையும்

அனுப்ப வேண்டிய முகவரி:

புலமைப்பரிசில்
சித்தியடைந்தோர்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

# எதிரிகளை ஏமாற்றும் மாயச் சிலந்தி

தென் அமெரிக்காவின் பெரு நாட்டின் அமேசன் காடுகளில் உள்ள விசேட சிலந்தி இனமொன்று, எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மாயச் சிலந்தி ஒன்றை உருவாக்குகின்றது. இவ்வாறு உருவாக்கும் மாயச் சிலந்தியை, அவற்றின் வலையில் கண்ணுக்குப் புலப்படும் ஓரிடத்தில் வைப்பதனூடாக, தமது எதிரிகளை ஏமாற்றமடையச் செய்கின்றன. இறந்த பூச்சிகளின் உடல்கள் மற்றும் உலர்ந்த சருகுகள் என்பனவற்றைப் பயன்படுத்தியே இந்த மாயச் சிலந்தியினை இவை உருவாக்குகின்றன. எதிரிகளிடம் இருந்து தப்பித்துக்கொள்ளவே இந்த உபாயத்தினை அவை பின்பற்றுவதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

'சைக்ளோஸா' (Cyclosa) எனப்படும் இனத்தைச் சேர்ந்த சிலந்திகளே, இவ்வாறான நடைமுறையினைப் பின்பற்றுகின்றன. இவ்வாறு போலிச் சிலந்திகளை உருவாக்கும் வேறு வகை சிலந்திகளும் உள்ளன. ஆனாலும், அவற்றினால் சைக்ளோஸா சிலந்திகள் உருவாக்குவதுபோன்ற மாயச் சிலந்தி உருவத்தை உருவாக்க முடியாது.

ஃபில் டோரெஸ் (Phil Torres) என்ற உயிரியல் விஞ்ஞானியே இந்த வியப்பூட்டும் விடயத்தினைக் கண்டுபிடித்துள்ளார். கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சலிஸ் நகரில் வசிக்கும் அவர், கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் பெரு நாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு டம்போபட்டா ஆய்வு நிலையத்தினை அண்மித்துள்ள நதிக்கரைப் பகுதிக்கு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுடன் சென்றிருந்த போதே, இந்தக் கண்டுபிடிப்பை அவர் மேற்கொண்டிருந்தார்.




இது குறித்து Rainforest Expeditions எனும் வலைத்தளத்தில் ஃபில் டோரெஸ் கருத்துக்களைப் பதிவிடும்போது; 'தூரத்தில் இருந்து பார்க்கும்போது, நடுத்தர அளவிலான சிலந்தியாகத் தோற்றமளிக்கும் இந்த மாயச் சிலந்தி உருவம், ஓர் அங்குலம் அளவில்தான் இருக்கின்றது. இந்த மாயச் சிலந்தியானது, வலையின் நடுவில் பொருத்தப்பட்டுள்ளது. அதன் அருகில் செல்லும்போது, அந்த உருவம் அங்கும் இங்கும் அசைந்துகொண்டிருப்பது போன்று தோன்றியது. ஆனால், மிக அருகில் சென்று பார்க்கும்போதுதான், அது ஒரு மாய உருவம் என்று தெரியவந்தது. அது உலர்ந்த சருகுகள் மற்றும் இறந்த பூச்சிகளின் உடல்களால் உருவாக்கப்பட்டிருந்தது. இதன்னை யார்?, எப்படிச் செய்தார்கள்? என்பதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. நிஜ சிலந்தியைப் போன்று தோற்றமளிக்கும் இந்த மாய உருவத்தினை எவ்வாறு உருவாக்குவது? என்று சிந்தித்தவாறே, அந்த சிலந்தி வலையை மிகவும் நுணுக்கமாகப் பார்க்கும்போதுதான் அது ஒரு குட்டிச் சிலந்தியின் வேலை என்று தெரிந்தது' என்று குறிப்பிட்டிருந்தார்.

டோரெஸ் மீண்டும் கலிபோர்னியாவுக்குச் சென்ற பின்பு, தனது புதிய கண்டுபிடிப்பு குறித்து தெரிவிப்பதற்காக கோனெல் பல்கலைக்கழகத்தில் சிலந்திகள் மற்றும் அது சார்ந்த உயிரினங்கள் தொடர்பான துறைசார் விஞ்ஞானி லிண்டா ரேனோவைச் சந்தித்தார். அதில் ஒரு விந்தை இருப்பதாகவும் அந்த சிலந்தி இனம் இதுவரை அறியப்படாத சிலந்தி இனமாக இருக்கலாம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அறிந்துகொள்வதற்காக பூச்சிகள் பற்றிய விஞ்ஞானிகளிடம் கலந்துரையாடிவிட்டு, டோரெஸ் மீண்டும் டம்போபட்டா நதிக்கரைப் பகுதியில் உள்ள சிலந்தி வலைகளை ஆய்வுசெய்யச் சென்றார். அந்த நதிக்கரைப் பகுதியில் அவ்வாறான 25 சிலந்தி இனங்களை அவர் கண்டுபிடித்தார். அத்துடன், அப்பகுதியை தவிர வேறு எந்தப் பகுதியிலும் இத்தகைய சிலந்திகளை அவர் கண்டுபிடிக்கவில்லை.

எவ்வாறாயினும், இது தொடர்பில் மேலதிக ஆய்வுகளை டோரெஸ் மேற்கொண்டு வருகின்றார். உயிரியல் விஞ்ஞானிகள் இந்த புதிய இனத்தை அங்கீகரித்த பின்னர்தான் இச்சிலந்தி இனத்திற்குப் புதிய பெயர் சூட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அஷ்விதா**

விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
DIPLOMA IN ENGLISH கிலாஸ் போகாமலே இங்லீஸ் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./ மாணவர் அடையாள அட்டை
@- 2014 ஆம் ஆண்டு வர்ண கலண்டர் ஒன்று இலவசம்.
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/- மாத்திரம் அறவிடப்படும். மாற்றுக்கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாஜால உடை

01 கே. விஜயன்

தொடர்கதை



## குதிரையில் வந்த அந்நியர்கள்

முன்னொரு காலத்தில் பேரரசர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் ஆனந்தவர்மன். அவருக்கு உடைகள் என்றால் அளவற்ற ஆசை. விதவிதமான ஆடைகளை தினந்தோறும் அணிவார். அரசரை மகிழ்விக்க பல்வேறு பட்ட நாடுகளிலிருந்தும் புடவை வர்த்தகர்கள் அடிக்கடி அந்நாட்டிற்கு விஜயம் செய்தார்கள். அவர்கள் புதிய புதிய வடிவங்களில் ஆடைகளை அறிமுகப்படுத்தினார்கள். அன்பளிப்பு செய்தும், விற்பனை செய்தும் மன்னர் ஆனந்தவர்மனை ஆனந்தப்படுத்தினார்கள். இதன்காரணமாக மன்னர் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் வெவ்வேறு விதமான ஆடைகளை அணிவார். அரசமாளிகையில் மன்னரின் ஆடைகளை அடுக்கி வைக்கவே பெரிய பெரிய அறைகளும் நிலைப் பேழைகளும் பெட்டிகளும் இருந்தன.

ஒரு பௌர்ணமி இரவு!

எங்கும் பால்போல் நிலா வெளிச்சம். இரு குதிரைகள் ஓர் ஒற்றையடிப் பாதையில் கடகட வெனப் பாய்ச்சலிட்டு ஓடிக்கொண்டிருந்தன. அவற்றின் மீது இருவர் சவாரி செய்துகொண்டிருந்தார்கள்.



அவர்களில் ஒருவன் குள்ளமாகவும் மற்றவன் உயரமாகவும் இருந்தான். குள்ளன் வழுக்கைத் தலையனாகவும் நீண்ட தாடியுடனும் காணப்பட்டான். நெட்டையன் பெரிய தலைப்பாகையுடன் மேல் நோக்கிய அம்பு மீசையுடனும் மெலிதான ஆட்டுத் தாடியுடனும் இருந்தான். அவர்களைப் பார்த்தால் மந்திரவாதிகள் போலிருந்தார்கள்.

அவர்கள் குதிரை சவாரி செய்வதில் மகா கெட்டிக்காரர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் குதிரைகள் மாயாஜால குதிரைகளைப் போன்று சூறாவளி வேகத்தில் பறந்துகொண்டிருந்தன. அவர்கள் பெரியதொரு கானகத்தைக் கடந்ததும் சலசலவென நீர் பாய்ந்தோடும் பெரிய ஆற்றைக் கடந்தே ஆனந்தவர்மனின் மகத நாட்டை அடையவேண்டியிருந்தது.

கானகமோ பொல்லாதது. சிங்கம், புலி, கரடி, மலைப்பாம்பு போன்ற சகல பொல்லாத ஜீவராசிகளும் அங்கு சர்வசாதாரணமாக அலைந்து திரிந்தன. மனிதர்களைக் கண்டால் தாவிப்பிடித்து ஒரு நொடியில் கடித்துக் குதறி சாப்பிட்டு விடும். அவ்வாறிருக்க எதற்காக இந்த மடையர்கள் உயிரைப் பணயம் வைத்துக்கொண்டு போகிறார்கள் என்று அவர்களைக் கண்ட வழிப்போக்கர்கள் நினைத்தார்கள். சிலர் அதை சொல்லவும் செய்தார்கள். அதைக்கேட்டு கட்டையனும் நெட்டையனும் கடகட வென்று சிரித்தார்கள். அந்த சிரிப்பைக் கண்டதுமே கேள்வி கேட்டவர்களுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. அந்த சிரிப்பு மனிதச் சிரிப்பா? இல்லை... ஏதோ பிசாசுகளின் சிரிப்பைப் போல் இருந்தது.

சிலர் நடுங்கினார்கள். சிலர் ஐயோ சாமி! ஆளைவிட்டால் போதும் என்று ஒரே ஓட்டமாக தலைதெறிக்க ஓடிவிட்டார்கள்.

நேரம் செல்லச் செல்ல அந்த குதிரைகள் களைப்படைந்தனவாகத் தெரியவில்லை. அவற்றின் வேகம் மேலும் அதிகரித்து, அவை கடும் சூறாவளி வேகத்தில் பறந்து பொழுது விடியும் முன்னரே மகத நாடு போய் சேர்ந்தன.

(தொடரும்)

---

## சிறந்த வீரன்!

தனது நாட்டு வீரர்களுள் சிறந்த வீரன் ஒருவனைத் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்க விரும்பினார் அரசர். இதனால், அரசரும் அமைச்சரும் சிறந்த வீரனைக் கண்டறிய மாறுவேடத்தில் புறப்பட்டனர். ஓர் இடத்தில் நூறு சிலம்பாட்ட வீரர்களின் மத்தியில் ஒருவனாக நின்று கம்பைச் சுழற்றி வீசி அனைவரையும் தோற்கடித்தான் ஒரு சிலம்பாட்ட வீரன்.

"அரசே, இவன்தான் உண்மையான வீரன்" என்றார் அமைச்சர்.

அரசர், ஆமாம் என்பது போலத் தலையசைத்துவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார். அடுத்து ஓர் இடத்தில், ஐம்பது வாள் வீரர்களைத் தனி ஒருவனாக நின்று வாட்போர் புரிந்து ஓடச் செய்தான், ஒரு வாள் வீரன்.

"இவனும் வீரன்தான்..." என்றார் அமைச்சர்.

"ஆமாம்... மேலும் பார்ப்போம்" என்றார் அரசர்.

வேறு ஓரிடத்தில் கோயில் யானை ஒன்று மதம் பிடித்து, பாகனைத் தூக்கி வீசிவிட்டு ஓடிவந்துகொண்டிருந்தது.

அரசரும் அமைச்சரும் குதிரைகளை வீதியின் ஓரமாக நிறுத்தினர். மக்கள் அச்சத்தால் அலறியடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர். அப்போது எங்கிருந்தோ வந்த ஓர் இளைஞன், மதம் பிடித்த அந்த யானையை அடக்கி, அதை ஒரு கம்பத்தில் கட்டி வைத்தான்.

"ஆகா! இவன்தான் பெரும் வீரன்" என்றார் உற்சாகமாக அமைச்சர்.

அரசரும் தலையாட்டினார். பின்னர் இருவரும் அரண்மனையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். அப்போது ஓர் இடத்தில் கூச்சல் கேட்டு, இருவரும் அங்கே சென்றனர். அங்கே, மக்கள் கூட்டத்தின் நடுவே ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் நின்ற ஒருவர் அவனைக் கடுஞ்சொற்களால் திட்டிக் கொண்டிருந்தார். உலகிலுள்ள அத்தனை இழிவான சொற்களையும் கொண்டு அந்த இளைஞனைத் திட்டினார். அவ்வப்போது அவனை அடிக்கப் போவது போலக் கையையும் ஓங்கிக் கொண்டிருந்தார். ஆனால்,



அந்த இளைஞனோ சற்றும் முகம் சுளிக்காமல் இதமான வார்த்தைகளால், உண்மை நிலையை அந்த மனிதருக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

இறுதியில் உண்மையை உணர்ந்து அமைதியடைந்த அந்த மனிதர், "தம்பி, உண்மையை அறியாமல் உன்னைத் திட்டிவிட்டேன் என்னை மன்னித்துவிடு" என்று கூறிவிட்டுச் சென்றார்.

மறுநாள் அரசவையில், மன்னர் கையில் தங்கக்காசுகள் கொண்ட பரிசுக்குரிய பையை வைத்துக்கொண்டு தனது இருக்கையில் அமர்ந்திருந்தார்.

"அரசே, சிறந்த வீரனைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?" என்று கேட்டார் அமைச்சர்.

"ஆம் அதோ பாருங்கள்...." என்றார் மன்னர்.

அங்கே, அவர்கள் இறுதியாகப் பார்த்த அந்த இளைஞனை ஒரு காவலாளி அழைத்து வந்துகொண்டிருந்தான்.

வியப்புற்ற அமைச்சர், "அரசே, மத யானையை அடக்கிய இளைஞன் வீரன் இல்லையா?" என்று கேட்டார்.

"சினமுற்ற மனம், மதம் பிடித்த யானையை விடவும் கொடியது. எதிரில் நின்றவர் முகம் கடுத்து இழிச்சொற்களால் திட்டியபோதும் கூட கொதிப்படைந்த தன் மனதை அடக்கி, தன் முகம் கோணாமல் நிதானமாகப் பேசிய இளைஞனே சிறந்த வீரன்" என்று கூறி, அந்த இளைஞனுக்குப் பரிசை அளித்தார் மன்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய அங்கத்துவ நாடுகள் அடைந்த நன்மைகள்

19 ஆம் நூற்றாண்டில் பெரிய பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டது. உற்பத்திப் பொருட்களை விற்பதற்காகவும் புதிய இடங்களில் மூலப்பொருட்களைத் தேடுவதற்காகவும் அந்த நாட்டின் நிறுவனங்கள் பல நாடுகளுக்குச் சென்றன. இந்த முயற்சி அவர்களினால் உலகத்தின் அனைத்துப் பிராந்தியங்களில் உள்ள நாடுகளுக்குச் செல்வதன்மூலம் ஆரம்பமாகியது. இவ்வாறு பிற




நாடுகளுக்குச் சென்றவர்கள் படிப்படியாக கரையோரப் பகுதிகளில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டனர். தங்கள் ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்காக அவர்களுடைய நிர்வாக இயந்திரத்தில் வேலை செய்வதற்கு ஆங்கிலமொழி தெரிந்தவர்கள் தேவைப் பட்டார்கள். இதற்காக அவர்கள் பாடசாலைகளை நிறுவினர். அதுவரை காலமும் பாட்டின் மூலமும் கவிதைகளின் மூலமும் தங்கள் நீண்ட மொழித் தொடர்பை வைத்துக்கொண்ட மக்கள், ஆங்கிலக் கல்வியினால் ஆங்கில வசனங்களை எழுதக் கற்றுக் கொண்டனர். உதாரணமாக, தமிழில் கவிதை வடிவில் கூறப்பட்டு வந்த விடயங்கள் வசனமாக எழுதப்பட்டன. இது ஆங்கிலக் கல்வியினால் எமக்குக் கிடைத்த ஒரு பெரிய வரப் பிரசாதமாகும். அத்துடன், தங்கள் மூலப்பொருட்களைக் கொண்டுவந்தவர்கள் காலப்போக்கில் அந்த நாடுகளிலேயே மூலப்பொருட்களை உருவாக்கிக்கொண்டார்கள். உதாரணமாக, கைத்தறிச்சேலையைக் கொண்டுவந்தவர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளிலேயே மூலப் பொருளான பருத்தியை உற்பத்தி செய்தனர்.

அந்தவகையில், பருத்தியினால் சேலைகளை நெய்வதற்கு உரிய ஆலைகளை இலங்கையிலும் ஸ்தாபித்தனர். இதேவேளை, கல்வி பயின்ற இலங்கையர்கள் பலர் உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்றனர். இந்த உயர்கல்வியானது, அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், பொருளியற்துறை என்று விரிந்து சென்றது. அங்கு கல்வி கற்றுத் திரும்பியவர்கள் எமது நாட்டில் மக்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் மிகக் குறைவாகவே




இருப்பதைக் கண்டனர். இலவசக் கல்வி, இலவச வைத்திய வசதி, அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம், வேலைசெய்யும் பெண்களுக்கு பிரசவகால விடுமுறை முதலியவற்றை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக அவர்கள் போராடினர். இதற்காக அரசியல் இயக்கங்களை ஆரம்பித்தனர். இவ்வாறு எமது நாட்டில் ஆரம்பித்த 'சூரியமல்' இயக்கம் பிற்காலத்தில் முதலாவது அரசியல் காட்சியாகப் பரிணமித்தது. இதுவே இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியாகும்.

இவ்வாறே, இந்தியாவில் அகில இந்திய காங்கிரஸ் அமைப்பு உருவாகி 1947 இல் அக்கட்சியினூடாக இந்திய மக்களின் போராட்டத்தினால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது. இதனைத்தொடர்ந்து 1948 இல் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பின்னரும் பல நாடுகள் மேற்கூறிய தொடர்புகளுக்காக இந்த அமைப்பின்கீழ் இருந்து வருகின்றன. மேலும் பல நாடுகள் இதிலிருந்து விலகிக்கொண்டன. இன்றும் இந்த அமைப்பின்கீழ் உள்ள ஒரு பெரிய நாடு இந்தியாவாகும். அடுத்தமாதம் அதாவது, நொவெம்பர் 10-17 வரையில் இலங்கையில் இந்த அமைப்புக்களை உள்ளடக்கிய பொதுநலவாய நாடுகளின் அமர்வு நடைபெறவுள்ளது. இதற்காக தேசிய ரீதியாக பல விழிப்புணர்வு செயலமர்வுகள் நடத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**சி.குமாரலிங்கம்**





அறிவைத் தேடிச் செல்லும் சிறார்களுக்கு

12 வயதிற்கு குறைந்த தம்பி தங்கைகள் எவரேனும் விண்ணப்பிக்க முடியும்

கல்வி கற்கும் தம்பி தங்கைகளின் அறிவை வளர்க்கும் பொருட்டு, செலிங்கோ லை.்.ப் ரன்தரு சாரிகா எனும் கல்விச் சுற்றுலா ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இம் முறை நாங்கள் கொழும்பு தேசிய நூதனசாலை, கோள் மண்டலம், BMICH, பத்தரமுல்லை தியத பூங்கா மற்றும் கொழும்பு நகரத்தைச் சுற்றியுள்ள சில பிரதான இடங்களை பார்ப்பதற்கு சிறார்களை அழைத்துச் செல்ல உள்ளோம்.

செலிங்கோ லை.்.ப் கிளை உள்ள சகல நகரங்களிலிருந்தும் 4 வெற்றியாளர்கள்

எந்தவொரு செலிங்கோ லை.்.ப் கிளைக்கும் சென்று, 2014ம் ஆண்டுக்கான கால அட்டவணையுடன், விண்ணப்பப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவ் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து, 'செலிங்கோ லை.்.ப்', இல. 134, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இல்லையெனில் எந்தவொரு கிளையிலும் ஒப்படைக்க முடியும்.

விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி 2013 நவம்பர் 30.

வெற்றிபெறும் தம்பி, தங்கைகள் குலுக்கல் மூலமே தெரிவு செய்யப்படுவர். வெற்றிபெறுவோர் அவர்களுடைய தாய் அல்லது தந்தை அல்லது பொறுப்பாளர் உடன் இச்சுற்றுலாவில் பங்குபெற முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் அவர்களுக்கு இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

மேலும் 750 ஆறுதல் பரிசுகள்

இன்னும் பல இடங்களை பார்ப்பதற்கான வாய்ப்பு!

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


செலிங்கோ லை.்.ப்

WP/GT/3936 PHOENIX O&M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாருங்கள்.... விரைவில்—

'Comet ISON' அல்லது 'C/2012 S1' எனும் பெயரால் அழைக்கப்படும் வால்வெள்ளியானது, கடந்த நூற்றாண்டில் தென்பட்ட சகல வால்வெள்ளிகளைவிட மிகவும் பிரகாசமானது. இது வட துருவப்பகுதியிலேயே மிகத் தெளிவாகத் தெரியும். இதனை 2013 நொவெம்பர் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் நாம் பார்க்கக்கூடியதாக இருக்கும். இக்காலப்பகுதியில் பகல்வேளையிலும்கூட இதனை நன்கு தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கும்.



## பகலிலும் வா

வானியலாளர்களின் கணிப்பின்படி, இந்த வால்வெள்ளியின் பயணப்பாதையை அவதானிக்கும்போது, இதனை நாம் காணக்கூடிய ஒரே ஒரு சந்தர்ப்பமும் இறுதித் தருணமும் இதுவே ஆகும். இதன் பயணப்பாதை சூரியனை நோக்கி இருப்பதே இதற்கு காரணமாகும். இப்பயணத்தின் இறுதியில் இது சூரியனை நோக்கி ஈர்க்கப்பட்டு அழிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதளவில் இந்த வால்வெள்ளி வியாழன் கிரகத்தைத் தாண்டிப் புவியை நோக்கி வந்தவண்ணம் உள்ளது. புவியை நெருங்கும்போது, இதன் ஒளி அதிகளவு பிரகாசிக்கத் தொடங்கும். அதற்கமையவே இதனைப் பகல் வேளையிலும் நன்றாகக் காணக்கூடியதாக இருக்கும் என வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்ய வானியலாளர்களான விட்டாலி நெவ்ஸ்கி மற்றும் ஆர்ட்டியம் நொவிச்சோனக் ஆகிய இருவருமே இந்த அற்புதமான கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். ரஷ்யாவில் அமைந்துள்ள சர்வதேச அறிவியல் ஒளிமப் பிணையத்தில் உள்ள பிரதிபலிப்பு தொலைக்காட்டியின் (International Scientific Optical Network Telescope) உதவியுடனேயே இந்த வால்வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அடுத்தே, இதனைக் கண்டுபிடிக்க உதவிய தொலைக்காட்டியின் பெயரின் முதல் எழுத்துக்களைப் பயன்படுத்தி 'Comet ISON' என இந்த வால்வெள்ளி அழைக்கப்படுகின்றது.

இந்த வால்வெள்ளி சூரியனிலிருந்து இரண்டு மில்லியன் மைல் தொலைவில் பயணிக்கின்றது. இதன் ஆரம்பம் பிரபஞ்சத்திற்கு வெளியே அமைந்துள்ள ஊர்ட் முகில் (Oort Cloud) பகுதியாக இருக்கலாம் என தற்போதளவில் கருதப்படுகின்றது. அது சூரியனுக்கும் புவிக்கும் இடையில் அமைந்துள்ள தூரத்தைபோல ஐம்பதாயிரம் மடங்கு அதிகமாகும். இந்த புதிய வால்வெள்ளி வியாழனின் சுற்றுப்பாதைக்கு வந்த பின்பே, அதன் பிரகாசம் அதிகரிக்கத் தொடங்கியது.

அதனுள்ளே இருந்த பனிப்படலமானது, சூரியனின் வெப்பத்தால் சூடாகி நேரடியாக நீராவியாக மாறியுள்ளது. இதனை 1997 ஆம் ஆண்டு காட்சியளித்த ஹேல்-பொப் வால்வெள்ளியைப் போன்று அல்லது அதனைவிடவும் பிரகாசமானதாக எதிர்வரும் மாதங்களில் உங்களால் காணக்கூடியதாக இருக்கும். இவ்வாறே, 2007 இல் தோன்றிய மிகவும் பிரகாசமான வால்வெள்ளியாகக் கருதப்படும் 'மெக்நோட்' எனும் வால்வெள்ளியானது, வெள்ளிக் கிரகத்தைவிடவும் பிரகாசமாக ஒளியை வீசியது.



இது 1997 இல் தோன்றிய ஹேல்-பொப் வால்வெள்ளியாகும். இதனைவிட மிகப் பிரகாசமான Comet ISON வால்வெள்ளியை எதிர்வரும் மாதங்களில் காணலாம்.



### அவ்வப்போது தோன்றும் வால்வெள்ளிகள்

'வால்வெள்ளி' (வால்நட்சத்திரம், தூமகேது) என்பது, தூசு துணிக்கைகளும் சின்னஞ்சிறிய பாறைத்துண்டுகளும் உறைந்த காபனீரொட்சைட், மெத்தேன் மற்றும் நீர் என்பன ஒன்று திரண்ட பனி உருண்டையாகும். பொதுவாக இதனை 'அழுக்குப் பனிப் பந்துகள்' (dirty snow-balls) என்றே அழைப்பர். எனினும், 'பனியால் போர்த்தப்பட்ட அழுக்குப் பந்து' (Snowy dirtballs) என்பதே இதற்குரிய சரியான சொல்லாகும். இந்த வால்வெள்ளிகள் பொதுவாக 'குய்பெர் வளையம்' அமைந்துள்ள இடத்திலேயே உருவாகின்றன. அது நெப்டியூனுக்கு அப்பால் அமைந்துள்ள சிறி[illegible] பனிக்கட்டிகள், பாறைத் துண்டுகள் நிறைந்துள்ள பிரதேசமாகும்.

அவ்வப்போது அங்கு உருவாகும் பனி உருண்டை ஒன்று அதிலிருந்து கழன்று சென்று, ஞாயிற்றுத் தொகுதிக்குட்பட்ட வலயத்தில் மோதுவதுண்டு. இதன்போது அதிலுள்ள பனிக்கட்டிகள் மற்றும் ரசாயனப் பொருட்கள் சூரிய வெப்பத்தால் சூடாகின்றது. பின்னர் அது விரிவடைந்து ஆயிரக்கணக்கான மைல் நீளமான வாலாக உருவெடுக்கின்றது. இந்த நீண்ட வாலின் மையப்பகுதி (கரு), சூரியனை நோக்கித் திரும்பியிருக்கும்போது, அதன் நீண்ட வாலின்மேல் சூரிய ஒளிபடுவதனூடாக அது பிரகாசமானதாகக் காட்சிதருகின்றது. வால்வெள்ளியானது, விண்கல்லைவிட (asteroid) வேறுபட்டது. விண்கற்கள் என்பது உலோகங்களாலும் பாறைப் படிவுகளாலும் உருவானவையாகும். சந்திரன் மற்றும் கிரகங்கள் உருவானபோது எஞ்சியவையாகவே இவை கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# ல்வெள்ளி தோன்றும்!


எட்மன் ஹேலி

## ஹேலியின் வால்வெள்ளி

நாம் நன்கறிந்த வால்வெள்ளிதான் 'ஹேலியின் வால்வெள்ளி' ஆகும். அது எட்மன் ஹேலி எனும் விஞ்ஞானியால் 1682 இல் கண்டுபிடிக்கப்பட்டது. அவரை கௌரவிக்கும் முகமாகவே இந்த வால்வெள்ளிக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. இது 75-76 வருடங்களுக்கு ஒருமுறை புவியை நோக்கி வரும் என அவர் கூறினார். 1986 இல் இந்த வால்வெள்ளி ஞாயிற்றுத் தொகுதியின் மத்திய பகுதியில் பயணித்தபோது, ஜியோட்டோ உள்ளிட்ட ஐந்து விண்கலங்கள் அடுத்தடுத்து அதனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்டன.

தனது கண்டுபிடிப்பின்படி, 1758 இல் மீண்டும் அந்த வால்வெள்ளியைப் பார்க்கமுடியும் என எட்மன் ஹேலி எதிர்வு கூறினார். ஆனால், அதனை பார்ப்பதற்கு 16 வருடங்களுக்கு முன்பே அவர் காலமானார். 1910 இல் ஹேலியின் வால்வெள்ளி புவிக்கு மிக அண்மையில் காட்சியளித்தது. 1986 இல் மீண்டும் தோன்றிய பொழுதிலும் சூரியனின் மறுபக்கத்தில் இருந்தமையால், அது சரியாகக் காட்சியளிக்கவில்லை.

மாபெரும் வால்வெள்ளியின் வால்ப்பகுதியானது, 330 மில்லியன் கிலோமீற்றர் நீளமானதாகும். அதாவது, 200 மில்லியன் மைல் நீளமாகும். அதன்மூலம் பூமியை சுற்றிக் கட்டுவதாயின் 800 முறை சுற்றிக் கட்டலாம் என வானியலாளர்கள் கூறுகின்றனர். வால்வெள்ளியின் அடர்த்தியானது, வளி மற்றும் நீரைவிட மிகக் குறைந்ததாகும். சகல வால்வெள்ளிகளையும் ஒன்று சேர்த்து தரா்சொன்றின் ஒரு தட்டிலும் பூமியை மறு தட்டிலும் வைக்க முடியுமாயின், இரண்டும் சமமான நிறையைக் கொண்டதாக இருக்கும்.

இங்கிலாந்தில் வசிக்கும் புகழ்பெற்ற இலங்கையரும் வானியலாளருமான சந்திரா விக்ரமசிங்ஹ மற்றும் சேர். ஃபெட்ரிக் ஹொய்ல் ஆகியோர், புவியில் உயிரினங்கள் உருவாகியது பிரபஞ்சத்தின் மூலையில் என்றும் அவை வால்வெள்ளிகளின் மூலமாகவே புவிக்கு வந்திருக்கலாம் என்றும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.


ஹேல்-பொப் வால்வெள்ளி இரு வால்களுடன் தோன்றிய விதம். அசையும் துகள்களினால் உருவான வால் ஒன்று (இடது), தூசு மற்றும் வேறு சிதைவடைந்த பொருட்களினால் உருவான வால் ஒன்று (வலது) என இரண்டு வால்களாக அது தென்பட்டது.

## ஏராளமான வால்வெள்ளிகள்

விண்வெளியில் 10 டிரில்லியனுக்கும் (Trillion) மேற்பட்ட வால்வெள்ளிகள் இருக்கின்றன. அவை மிகப் பெரியதாயினும் மிகத் தொலைவில் அமைந்திருப்பதால், எமது கண்களுக்குத் தெரிவதில்லை. எமக்குத் தெரிவதோ அவ்வப்போது சூரியன் இருக்கும் திசையை நோக்கி வரும் வால்வெள்ளிகள் மாத்திரமே.

அத்தகைய 700 வால்வெள்ளிகள் இதுவரை வானியலாளர்களின் பார்வைக்கும் ஆய்வுக்கும் உட்பட்டுள்ளன.

1843 ஆம் ஆண்டு அவதானிக்கப்பட்ட


'Comet ISON' வால்வெள்ளியே இங்கு இருகோடுகளால் குறித்துக் காட்டப்படுகின்றது.


ஐந்து வருடங்களுக்கு முன் தோன்றிய ஹேல்- பொப் வால்வெள்ளியானது, அலஸ்காவில் காட்சியளித்த விதம்.

**இரஞ்சித் ஜெயகர்**

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்


ஹட்டன், பன்மூர் வித்தியாலய மாணவி ம.யுவதர்ஷிகா, 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,மகேசுபிள்ளை-நாகஜோதி தம்பதியரின் புதல்வி ஆவார்.


மாத்தறை, தாருல் உலூம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவியான எஃப். நிஸ்ரா, 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், இக்ராம்-நிஸ்மா தம்பதியரின் புதல்வியாவார்.


தில்லையடி அன்சாரி அரசாங்க முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவியான எம்.ஆர்.நிரோசியா பானு, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.


எம்.ஆயிசா முனவ்வரா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தில்லையடி அன்சாரி அரசாங்க முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவியாவார்.


அஸ்கர் முகம்மது அஸ்ரார், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தில்லையடி அன்சாரி அரசாங்க முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவராவார்.

## வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள்


எம்.அம்ஜத், 188 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம். அர்ஹம்-நூருல் ஸஹியா தம்பதியரின் புதல்வராவார்.


எம்.அர்க்கம், 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம். அஷ்றஃப்-எஃப். ரிஹானா தம்பதியரின் புதல்வராவார்.


ஆர்.ராஷித், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஃபளுளுர் ரஹ்மான்-எஃப். ஃபஹ்மிதா தம்பதியரின் புதல்வராவார்.


எஃப்.ஆஇஷா ஸித்தீக்கா, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம். ஃபவ்ஸி-எஃப். இல்மியா தம்பதியரின் புதல்வியாவார்.


எஃப்.ஸஃபிய்யா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம். அன்ஸர்-எஃப். நஸ்லா தம்பதியரின் புதல்வியாவார்.


எம்.யூனுஸ், 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம். பதுர்தீன்-எஃப். ஸரீனா தம்பதியரின் புதல்வராவார்.


எஃப்.ஃபஸீஹா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஏ. உஸ்மான்-ஸித்தி பரீதா தம்பதியரின் புதல்வியாவார்.


எஃப்.இஷ்ஃபா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நவ்ஸாத்தீன்-எஸ்.ஷுக்ரியா தம்பதியரின் புதல்வியாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் பகுதி -I (தரம் - 04)


பெயர்: ..............................................................................

★ *பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கீறிடுக.*

01) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




02) இவ்வுருவில் காட்டப்பட்டது போன்ற சிறிய சதுரங்கள் எத்தனை அடங்கும்?



1. 6 2. 9 3. 7

03) இவ்வுருக்களை இணைத்து ஆக்கக்கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?





04) பின்வரும் உரோம எண்ணை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது பெறுமானத்தில் மாற்றம் இல்லாத எண் யாது?

1. XIX 2. XI 3. VII

05) 4, 9, 0, 2 ஆகிய எண்களைக்கொண்டு ஆக்கக்கூடிய பெரிய எண்;

1. 9042 2. 9420 3. 9240

06) 746, 752, 758, ............. இத்தொடரில் அடுத்து வரும் எண் யாது?

1. 764 2. 760 3. 763

07) ☐ X 5 = 30 கூட்டிற்குள் வரவேண்டிய எண் பின்வருவனவற்றுள் எது?

1. 25 2. 6 3. 15

08) 36 இன் $\frac{1}{4}$ பங்கு யாதாயிருக்கும்?

1. 18 2. 15 3. 9

09) 1200g நிறையுடைய கடலையை 200g நிறையுடைய சிறு பொதிகளாகப் பொதி செய்தால் பெறக்கூடிய பொதிகள் எத்தனை?

1. 6 2. 2 3. 5

10) ஒரு இனிப்புப் பானப் போத்தல் 6 பேரை உபசரிக்கப் போதுமானது. எனின், 14 பேரை உபசரிக்க எத்தனை பானப் போத்தல்கள் தேவை?

1. 2 2. 3 3. 4

11) 2l 50ml ஐ ml இல் குறித்தால்;

1. 2500ml 2. 250ml 3. 2050ml

12) 7 இன் கூட்டங்கள் 5 எத்தனையைக் குறிக்கும்?

1. 12 2. 30 3. 35

13) மோகன் பாடசாலைக்குச் செல்லும்போது, அவனது நிழல் அவனைப் பின்தொடருமாயின், அவன் எத்திசையில் நடக்கின்றான்?


1. கிழக்கு 2. மேற்கு 3. வடக்கு




14) காலை 7.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரையுள்ள காலம் எத்தனை மணித்தியாலங்கள்.


1. 8 மணித்தியாலம் 2. 7 மணித்தியாலம் 30 நிமிடங்கள் 3. 9 மணித்தியாலம்

15) செங்கோண முக்கோணமுள்ள உருவின்கீழ்க் கோடிடுக.




### பகுதி -II

01) அருகிலுள்ள வரிப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1. வீட்டிற்கு வடக்கில் காணப்படும் கட்டடம் எது?
2. வீட்டிற்கு தெற்கில் காணப்படும் கட்டடம் எது?
3. சந்தைக்கு கிழக்குத் திசையில் காணப்படும் கட்டடம் எது?
4. பாடசாலைக்கு தெற்குத் திசையில் காணப்படும் கட்டடம் யாது?
5. வீட்டிற்கு மேற்குத் திசையில் காணப்படும் கட்டடம் எது?
6. கோயிலுக்கு மேற்கில் காணப்படும் கட்டடம் யாது?

02) வரைபை அவதானித்து, சரியான விடையைத் தருக;




1. உதைபந்தை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?
2. கிரிக்கெட்டை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?
3. கிரிக்கெட்டையும் உதைபந்தையும் விரும்புவோர் எத்தனை பேர்?
4. கிரிக்கெட்டை விரும்புவோர் எத்தனை பேர்?
5. உதைபந்தை விரும்புவோர் எத்தனை பேர்?

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### சுற்றாடல் தரம் - 4 விடைகள்

*(23 ஆம் திகதி பிரசுரமானவை)*

**பகுதி -I**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 04. 4 | 07. 4 | 10. 4 | 13. 4 |
| 02. 2 | 05. 1 | 08. 2 | 11. 3 | 14. 4 |
| 03. 2 | 06. 4 | 09. 2 | 12 3 | 15. 2 |

**பகுதி -II**

| 01) | 02) | 03) |
|---|---|---|
| 1. தேன் | 1. X | 1. உப்பு, சீனி |
| 2. சிலந்தி | 2. ✓ | 2. கருவாடு |
| 3. நுளம்பு | 3. X | 3. பால் |
| 4. பல்லி | 4. ✓ | 4. சீனி |
| 5. மண்புழு | 5. ✓ | 5. உப்பு, மீன் |
| 6. ஈ | 6. ✓ | 6. கருவாடு, மீன்,முட்டை |
| | | 7. முட்டை, பால் |

04)

| உக்கும் கழிவுகள் | உக்கா கழிவுகள் |
|---|---|
| சிரட்டை | கண்ணாடி |
| மட்டை | பொலித்தீன் |
| பலகை | ப்ளாஸ்டிக் |
| துணி | ரெஜிஃபோம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோமானிய கலைநுட்பங்கள்

சிறப்பான கலைப்படைப்புகளைக்கொண்ட நகராக ரோம் நகரம் திகழ்கின்றது. கட்டடக் கலை, சிற்பக் கலை ஆகியன அங்கு சிறந்து விளங்கியது. ரோமானிய கலைப்படைப்புகளான சிற்பங்கள், தேவாலயங்கள், அரண்மனைகள் அவர்களது கலைப்படைப்பாற்றலை வெளிப்படுத்தும் சிறந்த சான்றுகளாகும்.

கி.மு. 300 ஆண்டுகள் வரலாற்றைக்கொண்ட ரோமக் கலைகளில் கிரேக்கத்தின் இயல்புகளையும் காணமுடியும். ரோமின் பிரதான கலைப்படைப்பாகக் கருதப்படும் Colosseum என்ற அரங்கம் கிரேக்க கலை இயல்புகளுக்கு சிறந்த உதாரணமாகும்.

கி.மு. 80 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்த அரங்கு இரு மாடிகளைக் கொண்ட வட்ட வடிவமானது. இங்கு அயோனிக், டொரிக், கொரின்தியன் ஆகிய அம்சங்களைக் காணமுடியும்.


கொலோசியம் அரங்கம்


கொலோசியம் அரங்கின் உட்பகுதி


பண்டைய ரோமானிய சிற்பம்


கொலோசியம் தேவாலயத்தில் உள்ள சிற்பம்



சிறப்பான கட்டடக் கலைநுட்பத்தினை வெளிப்படுத்தும் கட்டடம் ஒன்று


பண்டைய கால ரோமானிய சிற்பம்

## தெரிந்து கொள்வோம்



* 'டைம் கெரில்லா' என்ற பெயரில் அண்மையில் உலகப்புகழ் பெற்ற தலைவர் ஒருவரின் சுயசரிதை நூல் வெளியிடப்பட்டது. அந்நூலில் யார் பற்றிய வாழ்க்கை வரலாறு வெளியிடப்பட்டது?
  முன்னாள் கியூப ஜனாதிபதி ஃபிடல் கெஸ்ட்ரோவின் வாழ்க்கை வரலாறு
* மொங்கோலியாவின் தலைநகரம் எது?
  உலன் பட்டோர்
* வரலாற்றுக் காலத்தில் பின்வரும் நதிகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
  i. தெதுறு ஓயா- ஜஜ்ரா நதி
  ii. மாணிக்க கங்கை - கப்பரகந்த நதி
  iii. கல்யாணி - களனி நதி
  iv. கதம்ப நதி - மல்வத்து ஓயா



* பௌத்த சமயத்தைத் தழுவிய வெளிநாட்டவர் ஒருவர், பௌத்த கொடியை நிர்மாணித்து வெசக் பௌர்ணமி தினத்தை விடுமுறை தினமாக்கினார். அவர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
  ஹென்றி ஒல்கொட் - ஐக்கிய அமெரிக்கா



* இலங்கையின் இறுதி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆவார். அவ்வாறே, இந்தியா மொகலாய மன்னர்களின் இறுதி மன்னர் யார்?
  பகதூர் ஷா



* தமிழ் முனி அல்லது குறுமுனி எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் புலவர் யார்?
  அகத்தியர்



* 'சரோஜா' எனும் சிங்களப் படத்தில் நடித்த சிறுமி ஈரான் சர்வதேச படவிழா உட்பட பல விழாக்களில் சிறந்த குழந்தை நடிப்புக்காக பரிசு பெற்றவராவார். அவரின் பெயர் என்ன?
  நித்தியவாணி கந்தசாமி

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்
விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
பாடசாலை: ..............................
வகுப்பு: ..............................
திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட எஹலப்பொலை


பிரித்தானியரிடம் இருந்து மீண்டும் ஆதரவினையும் உதவிகளையும் எஹலப்பொலை எதிர்பார்த்தான். அதற்காக அவனின் சில ஆதரவாளர்கள் டொய்லியை சந்திப்பதற்காக வந்தனர். அப்பொழுது, ''நீங்கள் இந்த அளவிற்கு மன்னனுக்கெதிராக செயற்படுவதற்குரிய காரணங்கள் தான் என்ன?'' என டொய்லி பிரதிநிதிகளிடம் கேட்டார். ''மன்னன் செய்யும் தவறான காரியங்கள்தான் எம்மை இவ்வாறு செயற்படத் தூண்டின என பதில் கூறினர். அவை எவை என டொய்லி மீண்டும் வினவினார். அதற்கு சரியான பதிலை வழங்க எஹலப் பொலையின் பிரதிநிதிகள் தவறினர்.

இப்பிரதானிகள் சப்ரகமுவ மாகாணத்திற்குரிய செயற்கட்டு (அந்தந்த துறைக்குரிய அல்லது விகாரைகள் குறித்து வரவு-செலவு குறிப்புகள் உள்ளிட்ட ஆவணங்களின் தொகுப்பும் கொடியும்) களை எஹலப்பொலையின் பெயரால் டொய்லியிடம் கையளிக்க முயற்சித்தனர். எனினும், தமக்கு உரிமையில்லாத ஆவணங்களையும் பொருட்களையும் பெற்றுக்கொள்ள ஆங்கிலேயர் விரும்பவில்லை. இதனால், முன்னாள் பிரதானியாகிய எஹலப்பொலை கையாளாகாத நிலைக்குத் தள்ளப்பட்டான். அவனுக்கு தனது சொந்த மாகாணமாகிய சப்ரகமுவையில் காலடி வைப்பதற்குக்கூட முடியவில்லை. ஆங்கிலேயரின் அழைப்பில்லாமல் அவர்களுக்குச் சொந்தமான பிரதேசங்களுக்குச் செல்லவும் அவன் விரும்பவில்லை. இந்நிலையை டொய்லி நன்கு அறிந்து கொண்டார். ஆங்கிலேயருக்குச் சொந்தமான பிரதேசத்தில் தங்குவதற்கு இடமளித்தான். அன்றுமுதல் எஹலப்பொலை பிரித்தானியருக்கு சார்பானதொரு நபராக நாட்களைக் கழிக்க ஆரம்பித்தான். இதற்கிடையில், மொல்லிகொடை சப்ரகமுவைக்கு வந்தான். கிளர்ச்சியாளர்களை துரத்தி அடித்தான். 47 கிளர்ச்சித் தலைவர்களை கைது செய்து மன்னன் முன் நிறுத்தினான். மன்னனின் கட்டளைப்படி அக் கைதிகள் அனைவரும் கொல்லப்பட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Google Terms of Service இல் மாற்றம்








Google, Google+ போன்றவற்றில் நீங்கள் பகிர்ந்துகொள்ளும் கருத்துக்கள், தரப்படுத்தல்கள், படங்கள் (comments, ratings, photos) போன்றவற்றை தனக்குச் சாதகமாக, விளம்பரங்களில் பயன்படுத்த Google முடிவு செய்துள்ளது. இந்த மாற்றம் நொவெம்பர் 11 இல் இருந்து செயற்படத் தொடங்கும். அந்த முறையில், உங்கள் தரவுகள் பயன்படுத்தப்படுவதை விரும்பாதவர்கள் settings இல் சென்று disable செய்துகொள்ளலாம். அப்படிச் செய்யாவிட்டால், உங்கள தகவல்கள் உங்கள் படங்களுடன் இங்குள்ள படத்தில் உள்ளது போன்று வெளியாகும்.

இதைத் தடுக்க நீங்கள் Shared Endorsements என்ற பக்கத்தில் 'Based upon my activity, Google may show my name and profile photo in shared endorsements that appear in ads'' என்பதை Uncheck செய்துவிடுங்கள்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இங்கே மடிக்கவும்

விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்

2013, ஒக்டோபர், 30, புதன்கிழமை

# புதிய மேம்படுத்தல்களுடன் bing.com

அண்மையில் Microsoft நிறுவனம் தனது bing.com தேடல் தளத்தின் இலச்சினையைப் புதியதாக மாற்றியதுடன், அத்தளத்தையும் முழுமையாக நவீனமயப்படுத்தியுள்ளது. இணையத்தில் bing.com தளமானது, தேடல் தளம் மட்டுமன்றி, அதற்கும் மேலானது என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ''நீங்கள் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்தும் தகவல்களைத் தேடித்திரட்டித் தந்து, உங்களுக்கு அவை சார்ந்த புதிய பார்வையினைத் தரும் தளமாக bing.com



மாறியுள்ளது'' என்று Microsoft நிர்வாகிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மிக வேகமாகச் செயற்படும் தளமாக மட்டுமின்றி, பார்க்கவும் அழகாகக் காட்சி அளிக்கும் தளமாக bing.com மாற்றப்பட்டுள்ளது. www.bing.com/new என்ற இணையத்தள முகவரியில் இது தற்போது முதல் நிலை வடிவில் உள்ளது. இந்தப் புதிய தளத்தில் Snapshot மற்றும் Sidebar என்ற இரண்டு வசதிகள் புதியதாகக் கிடைக்கின்றன. தகவல்கள் தரப்படும் பத்திகள் இரண்டாக்கப்பட்டு அறிவதற்கு எளிய வகையைக் கொண்டுள்ளன.

புதிய bing தளம், பார்க்கப்படும் மொனிட்டர் திரை, பயன்படுத்தப்படும் சாதனம் ஆகியவற்றிற்கு ஏற்ற வகையில் தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மை உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. கணினியில் எப்படி தேடல் முடிவுகள் அழகாகக் காட்டப்படுகின்றனவோ, அதேபோல ஃபோனிலும் மடிக்கணினிகளிலும் இருக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயம் செய்து, புதிய வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய தள அமைப்பு முதலில் அமெரிக்க வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பார்க்கவும் பயன்படுத்தவும் கிடைக்கின்றது. பின்னர் ஏனைய நாடுகளில் உள்ளவர்களுக்கு இதன் பயன்பாடு விரிவுபடுத்தப்படும் என்று Microsoft அறிவித்துள்ளது.




இங்கே வெட்டவும்

# GPS ஓர் அறிமுகம்

'GPS' (Global Positioning System) என்ற சொல்லை நாம் இப்போது அடிக்கடி கேட்கிறோம். 'புவியிடங்காட்டி' அல்லது 'புவி இடம் காட்டும் அமைப்பு' என்று இதற்குத் தமிழில் பொருள்கொள்ளப்படும். இது, உலகத்தில் எந்த இடத்தையும் மிகத் துல்லியமாக வானில் செயற்கைக்கோள்கள் மூலம் கண்டறியும் கருவி ஆகும்.

இது ஒவ்வொரு சுற்றிலும் குறைந்தது இரண்டு தடவைகள் உலகைச் சுற்றி வரும் செயற்கைக்கோள் கள் (Satellites) மூலம் தகவல் களைப் பயனாளிகளுக்குத் தரும் ஒரு முறையாகும். குறைந் தது மூன்று அல்லது நான்கிற்கு மேற்பட்ட செயற்கைக்கோள்கள் எமக்கு மேலே வந்து கொண்டிருக்கும். இந்த முறையில் ஏறத்தாழ 32 செயற்கைக்கோள்கள்








செயலில் ஈடுபடுகின்றன. இவற்றில் 24 செயற்கைக்கோள்கள் தொடர் இயக்கத்திலும் இன்னும் சில பழுதடையும்போது பயன்படுத்தக்கூடிய வகையிலும் மேலும் சில செயற்கைக்கோள்கள் செயலில் ஈடுபடுத்த முடியாத நிலையிலும் உள்ளன. GPS முறையில் Portable navigation devices, Smartphone apps, GPS sports watches, sports shoes, maps, real-time services, HD Traffic, cars, ships, aircraft, Open StreetMap (OSM) என பல வாங்கிகள் (Navigation Receiver) இயக்கப்படுகின்றன.

மேற்கூறிய வாங்கிகளுக்கு (Receiver),

அமெரிக்காவின் GPS முறை பொதுவாகப் பயன்பட்டாலும், வேறு பல பாவனைகளுக் காக வேறு இரண்டு நாடுகளாலும் GPS முறை பயன்படுத்தப்படுகின்றன. அவை:

1. Global Navigation Satellite Systems (GLONASS) - ரஷ்யா

2. Galileo, Global Navigation Satellite System (GNSS) - ஐரோப்பா

நாம் எங்கிருக்கிறோம்?, எங்கே போகிறோம்?, நீங்கள் எங்கிருக்கிறீர்கள்?, இலக்கை அடைய சரியான வழி எது?, எப்போது அங்கே செல்வோம்? போன்ற கேள்விகளுக்குப் பதில் தருவதன்மூலம் இடங்கள் குறித்த சரியான தகவல்களை இந்த முறைகள் எமக்குக் காட்டுகின்றன.

(VII ஆம் பக்கம் பார்க்க)






# GPS ஓர் அறிமுகம்


(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 32 செயற்கைக்கோள்களும் நிலத்தில் இருந்து ஏறக்குறைய 20,200 - 26,600 கி.மீற்றர் உயரத்தில், ஆறு நீள்வட்டப் பாதைகளில், 11,500 கி.மீற்றர் வேகத்தில் உலகைச் சுற்றுகின்றன. எமது





தகவல் பெறும் வாங்கிகளை (Receiver) இயக்கும்போது, நமக்கு மேலே உள்ள நான்கு செயற்கைக்கோள்களில் இருந்து தரவுச் சமிக்ஞைகளை அது carrier waves மூலம் பெற்றுக்கொள்கிறது. (carrier Frequencies, Digital Codes மற்றும் Navigation Message போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன)

இந்த GPS முறையானது, 1960 இல் அமெரிக்க பாதுகாப்புத் துறையினரால் பரீட்சார்த்த முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து, 1970 இல் தரையில் இருந்தும் (The ground-based Omega Navigation) , பின்னர் 1978 பெப்ரவரி 22 இல் பரீட்சார்த்த செயற்கைக்கோள் அனுப்பப்பட்டும் முயற்சிக்கப்பட்டது. 1993 டிசம்பர் முதல் 24 செயற்கைக்கோள் களுடன் செயல்பட ஆரம்பித்தது. 1995 ஜூலை 17 ஆம் திகதி முதல் முழுமை யான செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட் டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அறிவித்தது. 2012 இல் இதன் எண்ணிக்கை 32 செயற்கைக்கோள்களாக உயர்ந்தது. இவை 55 பாகை சாய்வாக பூமியைச் சுற்றிவர எடுக்கும் சராசரி நேரம்




11 மணி 58 நிமிடங்களாகும்.

இந்த GPS முறை மூன்று பிரிவுகளா கச் செயற்படுகிறது. இதில் Space segment என்பது, வானில் இயங்கும் செயற்கைக்கோள்கள் இருக்கும் பகுதி. அடுத்து உள்ள Control segment என்பது, பூமியில் இருந்து செயற்கைக் கோள்களின் இயங்குபாதை, அவற்றின் செயல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டுப் பகுதி.User segment பகுதிதான் பயனாளர்களிடம் பயன்பாட்டில் இருக்கும் கருவிகள். இவற்றின்மூலம் நாம் ஓர் இடத்தைப் பற்றித் தெளிவாக, துல்லிய மாக அறிந்துகொள்ளலாம். கார், மொபைல் ஃபோன் உட்பட, பல கருவிகளில் Map navigation வசதியாக இந்த அமைப்புத்தான் உள்ளது.



இங்கே வெட்டவும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

12

# உலகில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்திய...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ



சேர். டிம் பேர்னர்ஸ்-லீ அன்று 'World Wide Web' இன் முன்னேற்ற நிலை குறித்து தெளிவுபடுத்திய நிகழ்வொன்றின்போது. பின்னணியில் அவர் அதற்காகப் பயன்படுத்திய கரும்பலகை உள்ளது.

டிமொத்தி ஜோன் டிம் பேர்னர்ஸ்-லீ என்ற இயற்பெயரை உடைய சேர். டிம் பேர்னர்ஸ்-லீ எனும் சிரேஷ்ட விஞ்ஞானி, 'Tim BL' என்ற சுருக்கப் பெயராலும் அழைக்கப்படுகின்றார். இவரது பெற்றோரான கொன்வே பேர்னர்ஸ்-லீ மற்றும் மேரி லீ வூட்ஸ் ஆகிய இருவரும் வர்த்தக ரீதியில் முதன்முதலில் தயாரிக்கப்பட்ட முதலாவது கணினியான 'ஃபெரன்டி மாக்' தொடர்பில் பணியாற்றிய கணினி மற்றும் கணித விஞ்ஞானிகளாவர்.

ஒக்ஸ்போர்ட் பௌதிக விஞ்ஞானப் பட்டதாரியான டிம் பேர்னர்ஸ்-லீ, பொறியியலாளராக பணியாற்றிக்கொண்டே, 1978 இல் அச்சு தொடர்பான கணினி வர்ணக் கலவை மென்பொருள் ஒன்றை உருவாக்கினார். 1980 இல் சுவிற்சர்லாந்தின் சேர்ன் நிறுவனத்தில் பணியாற்றும்போதுதான் முதன்முதலாக hypertext என்ற விடயத்தினை முன்வைத்தார். இதனூடாக ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கணினி வலையமைப்பினூடாக தகவல்களைப் பரிமாற்றிக்கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டிய அவர், அதற்காக ENQUIRE என்ற பெயரில் முதல்நிலை அமைப்பொன்றையும் நிறுவினார்.

### World Wide Web


The WorldWideWeb (W3) is a wide-area hypermedia information retrieval initiative aiming to give universal access to a large universe of documents.

Everything there is online about W3 is linked directly or indirectly to this document, including an executive summary of the project, Mailing lists, Policy, November's W3 news, Frequently Asked Questions.

What's out there?
Pointers to the world's online information, subjects, W3 servers, etc.
Help
on the browser you are using
Software Products
A list of W3 project components and their current state. (e.g. Line Mode, X11 Viola, NeXTStep, Servers, Tools, Mail robot, Library)
Technical
Details of protocols, formats, program internals etc
Bibliography
Paper documentation on W3 and references.
People
A list of some people involved in the project.
History
A summary of the history of the project.
How can I help?
If you would like to support the web..
Getting code
Getting the code by anonymous FTP, etc.

சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ தயாரித்த முதலாவது வலைப்பக்கம்.

அதன்பின்னர், இங்கிலாந்தின் கணினி கட்டமைப்புடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய பேர்னர்ஸ்-லீ, அங்கு கணினி வலையமைப்பு தொடர்பான அறிவினைப் பெற்றார். 1984 இல் மீண்டும் சேர்ன் நிறுவனத்தில் இணைந்தார். அங்கு வைத்தே இணையத்தில் hypertext கோட்பாட்டினை அவர் இணைத்தார். 1989 மார்ச் மாதத்தில் இதன் அடிப்படை யோசனையை முன்வைத்த அவர், 1990இல்



ஸ்டீவ் ஜொப்ஸின் NeXTகணினிதான் உலகின் முதலாவது இணையத் தேடல் சாதனமாகும். (படத்தில் இருப்பது) சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ பாவனைக்குட்படுத்திய NeXT கணினி.




2012 லண்டன் ஒலிம்பிக்கின் ஆரம்ப விழாவின் காட்சியே இது. லண்டனில் ஒலிம்பிக் மைதானத்தில் டிம் பேர்னர்ஸ்-லீயை கௌரவிக்கும் முகமாக, அவரது முதலாவது தகவலான 'This is for Everyone' என்ற வாசகம் எல்சிடி திரையில் காண்பிக்கப்பட்டது. இந்த வாசகம்தான் NeXT கணினியை இயக்கி அவர் முதன்முதலில் அனுப்பிய தகவலாகும்.

ENQUIRE அமைப்பில் கையாண்ட சிந்தனைகளைப் பயன்படுத்தி World Wide Web இனை உருவாக்கினார். முதலாவது Web browser ஐயும் அதற்காகவே உருவாக்கினார். அதுமட்டுமன்றி, முதலாவது வெப் சேர்வரான சேர்ன் எச்டிடிபிடி (CERN HTTPD) யினையும் உருவாக்கினார். அந்தவகையில், 'சேர்ன்' இல்தான் முதலாவது வலைத்தளம் ஆரம்பமானது. அதனை இணையத்துடன் இணைக்கும் பணி 1991 ஒகஸ்ட் 6 ஆம் திகதி நடைபெற்றது. இன்றும் அவர் வலைத்தளத்தின் விஸ்வரூப வளர்ச்சி நிலையினை கண்காணித்து வருகின்றார். வேர்ல்ட் வைட் வெப் கொன்சோர்ட்டியத்தின் பணிப்பாளராக இருந்துகொண்டு அப்பணியினை ஆற்றி வருகின்றார்.

(இ)



# உலகில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்திய




## WWW

இந்த 'உலகளாவிய வலை' குறித்து அண்மையில் உலகின் கவனம் திரும்பியிருந்தது. சுமார் 24 ஆண்டுகளுக்கு முன்பு சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ள 'சேர்ன்' அணு ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றியபோதே இந்த அரிய கண்டுபிடிப்பு நிகழ்ந்தது.

1955 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி லண்டனில் பிறந்த டிம் பேர்னர்ஸ் -லீ, பௌதிகவியல் விஞ்ஞானியாகவும் கணினி அறிவியலாளராகவும் திகழ்கின்றார். இவர், ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையத்தில் (European Organization For Nuclear Research-(ERN) பணியாற்றிக்கொண்டிருந்தபோது, தனது நண்பர்களுடன் தொடர்பினைப் பேணுவதற்காக ஒரு வழிமுறை அவருக்குத் தேவைப்பட்டது. அதன் விளைவாகவே, 'வேர்ல்ட் வைட் வெப்' தோற்றம் பெற்றது. அதற்கமைய, 1989 மார்ச் மாதத்தில் முதன்முதலில் அவர் 'WWW' என்ற சொல்லைப் பயன்படுத்தும் யோசனையை முன்வைத்தார். அவர் தனது தகவல் பரிமாற்றக் குழுவான alt.hypertent news group இற்காக முன்வைத்த செயற்றிட்டத்தினை விளக்கும் போது, இந்த WWW செயற்றிட்டத்தின் நோக்கம் அனைத்து தகவல்களையும் செய்திகளையும் எந்தவோர் இடத்திற்கும் கொண்டு செல்வதாகும் என்றார்.





சர்வதேச தகவல் பரிமாற்றம் என்ற எண்ணக்கரு நடைமுறைச் சாத்தியமாவதைக் காணக்கிடைத்தமை பெரும் பாக்கியம் என்று சேர்.ஆதர் சி. க்ளார்க் ஒருமுறை தெரிவித்திருந்தார். அந்த அதிர்ஷ்டத்தை அடைந்த மற்றுமொரு சிறப்பு மிக்க விஞ்ஞானியும் இருக்கின்றார். அவர்தான் சேர்.டிம் பேர்னர்ஸ்-லீ ஆவார்.

சுமார் 24 ஆண்டுகளுக்கு முன்பு அவர் முன்வைத்த புதிய சிந்தனைகள் மற்றும் அதனூடாக அவர் சமர்ப்பித்த புதிய படைப்பு இன்று உலகம் முழுவதும் புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. தேச எல்லைகளைக் கடந்து ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்தும் தன்மையினையும் அது அடைந்துள்ளது. இந்த சிறப்புகளை அவர் தொடர்ந்து அவதானித்து வருவதுடன், இன்றும் அது தொடர்பான பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். அவரது உருவாக்கம்தான் 'வேர்ல்ட் வைட் வெப்' (World Wide Web - WWW) எனப்படும் 'உலகளாவிய வலை' ஆகும்.



உலகுக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட





பின்னர் அது நேரடியாக இணையும்போது டிம் பேர்னர்ஸ்-லீ இவ்வாறு கூறினார். ''இந்த வலைத்தள (website) விஸ்தரிப்பினை வேறு பகுதிகளுக்கும் மேற்கொள்வதில் நாம் அக்கறையாக உள்ளோம். இதனூடாக பிற தரவுகள் மற்றும் தகவல் சேவைகளுக்கும் இடமளிக்க நாம் முயற்சிக்கின்றோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருவோரை நாம் மனம் உவந்து வரவேற்கின்றோம்'' என்றார். அப்பொழுது பேர்னர்ஸ்-லீக்கு 56 வயது.

(VI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தகவல் தொழில்நுட்பம் General Information Technology GIT



கணினியானது, பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதற்கு, முதலில் பிரச்சினை எங்கு உள்ளது என்பதனைத் தெரிந்துகொள்கிறது. ஒரு செயற்பாட்டினூடாக இது நடந்திருந்தால், 'உள்ளீடு' (Input) என அழைக்கின்றோம். இந்த உள்ளீட்டுச் செயற்பாடு ஒரு தடவை விடயத்தை உட்செலுத்தி முடித்திருந்தால், அல்லது பிரச்சினை கணினியின் மூளைக்கு அனுப்பப்பட்டு இருந்தால், அது உடனடியாக வேலை செய்திருக்கும். வேலை செய்து-செயற்பாட்டினை முடித்து-விளைவினை மீண்டும் ஒரு செயற்பாடாக எமக்குச் சொல்வதை 'வெளியீடு' (Output) என அழைக்கின்றோம்.


இந்த அடிப்படையில், கணினி ஓர் இலத்திரனியல் சாதனம் என உங்களால் கூறமுடியும். கணினியானது, ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அடிப்படைத் தகவல்களில் (உள்ளீடு) இருந்து ஒரு விளைவினைக் (வெளியீடு) கணிக்கின்றது. கணினிகள் மின்சாரத்தின் உதவியுடனேயே செயற்படுகின்றது. அடிப்படை அறிவுறுத்தலின்படி, எந்த இலத்திரனியல் சாதனமும் 'செயற்பாடு' மற்றும் 'நிறுத்து' என்ற கட்டளைகளுக்கு ஏற்ப செயற்பட முடியும். விசை திறந்து இருக்கும்போது மின்சாரம் பாய்வதோடு, சாதனமும் உயிர்ப்பிக்கப்படுகின்றது. விசை மூடி இருக்கும்போது, மின்சாரம் இடைநிறுத்தப்படுவதோடு, சாதனம் செயற்படா நிலைக்கு மாறுகின்றது.



## கணினியின் சில அடிப்படை அமைப்புக்கள்

01. **Monitor:** கணினிச் சாதனங்களில் இது, தரவு அல்லது தகவலை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.
02. **CPU:** தரவுகளைச் செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
03. **Keyboard:** இது தரவுகளை உட்புகுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
04. **Mouse:** இதுவும் தரவுகளை உட்புகுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
05. **Speaker:** இது தகவல்களை ஒலி வடிவில் வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
06. **CD ROM:** இது இறுவட்டுக்கள் தொடர்பான வேலைகளைச் (Input/Output) செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.
07. **Printer:** இது தகவலைப் பதிவெடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.
08. **Scanner:** இது படங்கள், எழுத்துக்கள் போன்ற தரவுகளை உட்செலுத்தப் பயன்படுத்தப்படுகின்றது.
09. **Floppy Disk:** இது தரவுகளைச் சேமிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இன்றைய நவீன கணினிகளில் இதன் பாவனை இல்லாமல் போய்விட்டமை குறிப்பிடத்தக்கது.
10. **Pen/Flash Drive:** இது தரவுகளைச் சேமிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. நவீன தொழில்நுட்ப உலகில் இவற்றின் பயன்பாடு மிக அதிகமாகும். இவற்றின் வரவுக்குப் பின்னர் ஏனைய சேமிப்புச் சாதனங்களின் பணி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
11. **Blue-ray Disc:** இதுவும் தரவுகளைச் சேமிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஒப்பீட்டளவில் இறுவட்டுக்களில் கொள்ளளவு கூடியதாகும்.

### Some of Computer Devices




## சேமிக்கும் சாதனங்கள் (Storage Devices)

சேமிக்கும் சாதனங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.


1. *முதல் நிலை சேமிப்பகம்* (Primary Storage Device)
2. *இரண்டாம் நிலைசேமிப்பகம்* (Secondary Storage Device)

*** முதல் நிலை சேமிப்பகம் (Primary Storage Device)**

முதல் நிலை சேமிப்பகத்தினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.



1. தற்காலிக சேமிப்பகம் - (Temporary Storage Device)
   உ+ம்: RAM-Random Access Memory.
2. நிரந்தர சேமிப்பகம் - (Permanently Storage Device)
   உ+ம்: ROM-Read Only Memory/ BIOS-(Basic Input Output System)



*** இரண்டாம் நிலை சேமிப்பகம் (Secondary Storage Device)**

உ+ம்: Hard disk, Floppy disk, CD-(Compact Disc), Pen/ Flash drives, Memory chips, Cassettes/Magnetic tape, DVD-(Digital Video Disc).






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுசன ஊடகம் - செய்திகள்



வெகுசன ஊடகங்கள் மக்கள் வாழ்வியலின் ஓர் அங்கமாக மாற்றம் பெற்றுள்ளன. பொதுமக்கள் மத்தியில் காணப்படுகின்ற தகவல்களை அவதானித்தல் மற்றும் அறிக்கையிடல் செயன்முறைக்குட்படுத்தப்படுகின்றபொழுதே செய்தியாக அது மாற்றம் பெறுகின்றது. செய்தி என்பது, பொதுசன ஊடகம் வழியாக அறிக்கைப்படுத்தப்பட்ட ஒரு தகவலாகும். நாளாந்தம் அளவில்லாத பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அவையெல்லாம் பொதுசன ஊடகம் வழியாக அறிக்கையிடப்பட்டு, செய்தியாக முன்வைக்கப்படுவதில்லை. ஊடகவியலாளர்களால் அல்லது செய்தி நிருபர்களினால் அறிக்கையிடப்பட்டு, வெகுசன ஊடகங்களினால் பொதுசன ஊடக நிறுவனங்களில் ஒப்படைக்கப்படுகின்ற செய்திகளே முன்வைக்கப்படுகின்றன.



வெகுசன ஊடக செய்திகளை அவதானித்து அறிக்கையிடுபவரின் தனிப்பட்ட நிலைகளுக்கும், வெகுசன ஊடக நிறுவன பின்னணிகளுக்கும் ஏற்ப செய்திகளின் இயல்புகள் வேறுபட்ட வகையில் முன்வைக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஊடக பாடநெறி 57

- காலத்திற்கேற்றதாயிருத்தல்
- வெளிப்படைத்தன்மை
- தாக்கமுள்ளவையாயிருத்தல்
- அண்மித்த தன்மை
- மனித ஆர்வத்திற்குட்பட்டவை

போன்றன வெகுசன ஊடகங்கள் வழியாக முன்வைக்கப்படுகின்ற செய்திகளின் பொதுவான குணவியல்புகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன.


வெகுசன ஊடகங்களுக்கு செய்தியை அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்கள் அல்லது செய்தி நிருபர் செய்தியை அறிக்கையிடுவதற்குத் தான் அவதானித்த தகவல்களுடன் தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்ட மூலகங்களை அதாவது தகவலுக்கான மூலகங்களை அடிப்படையாகக் கொண்டு செய்தியை தயாரித்துக் கொள்ள வேண்டும். பொதுவாக செய்தி முகவர்கள், செய்திக்குறிப்பு, செய்தியாளர் மாநாடு, நேர்முக கலந்துரையாடல், விரிவுரைகள், கூட்டங்கள், செய்தி நாட்குறிப்பு, உத்தியோக பூர்வ அறிக்கை, பீட் (Beat) அறிக்கை, தொலைபேசி அழைப்புகள், தொலைநகல், நூலகம் மற்றும் சுவடிகள், ஆவணங்கள், படங்கள் ஒலி-ஒளி பதிவுகள் போன்றவற்றை தகவல் மூலகங்களாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

வெகுசன ஊடகத்திற்கு செய்தியை அறிக்கையிட்டு வழங்குகின்ற செய்திநிருபம் பல்வேறு ஆளுமைப் பண்புமிக்கதாகக் காணப்பட வேண்டும். குறிப்பாக பக்கம்சாராமை, புரிந்துணர்வுத் தன்மை, ஆராய்வூக்கம், பகுப்பாய்வுத் திறன், பொறுமை, தந்திரோபாய உத்திகள், படைப்பாற்றல், துணிவு, பரந்தநோக்கு போன்ற திறன்கள் கட்டியெழுப்பப்படல் வெகுசன தொடர்பில் ஆரோக்கிய நிலைகள், பண்புத்தர வெளிப்பாடுகள், உணரப்படுவதற்கு சாதகமாக அமையும்.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


தளிர்கரம்



எண்ணிக்கையைக் குறிப்பிடுக.


ஆங்கில எழுத்துக்களின் மூலம் இடைவெளிகளை நிரப்புக.




நிறந்தீட்டுக.

புள்ளிகளை இணைத்து உருவை முழுமைப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**පුතා:** **අම්මේ.. අම්මේ! ඔයා කොහේද?**
அம்மே... அம்மே! ஓயா கொஹேத?
**மகன்:** அம்மா... அம்மா! நீங்கள் எங்கே?

**අම්මා:** **ඇයි පුතා කෑ ගහන්නේ? මම මෙහේ.**
எய் புதா கே கஹன்னே? மம மெஹே.
**அம்மா:** ஏன் மகன் சத்தம் போடுகிறீர்கள்? நான் இங்கே.

**පුතා:** **අම්මේ! අද අපේ ශිෂ්‍යත්ව ප්‍රතිඵල ආවා.**
அம்மே! அத அப்பே ஷிஷ்யத்வ ப்ரதிபல ஆவா.
**மகன்:** அம்மா! இன்று எங்களுடைய புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வந்தன.

**අම්මා:** **ආ..ඔව් නේ. පුතා පාස් ඇති නේද? ඔයා හොඳට පාඩම් කළානේ.**
ஆ... ஒவ்னே. புதா பாஸ் எதி நேத? ஒயா ஹொந்தட்ட பாடம் களானே.
**அம்மா:** ஆ... அதுதானே. மகன் சித்தியடைந்திருப்பீர்கள்தானே? நீங்கள் நன்றாகப் படித்தீர்களே.

**පුතා:** **ඔව් අම්මේ, මට ලකුණු 178යි.**
ஒவ் அம்மே, மட்ட லகுணு 178ய்.
**மகன்:** ஆம் அம்மா, எனக்கு 178 புள்ளிகள்.

**ඒ විතරක් නෙමේ අම්මේ, මට තමයි පාසලේ ලකුණු වැඩිම.**
ஏ விதறக் நெமே அம்மே, மட்ட தமய் பாசலே லகுணு வெடிம.
அது மட்டுமில்லை அம்மா, பாடசாலையிலேயே அதிக புள்ளிகள் கிடைத்திருப்பதும் எனக்குத்தான்.

**අම්මා:** **ඇත්තද පුතා..? මට හරි සතුටුයි.**
எத்தத புதா...? மட்ட ஹரி சத்துட்டுய்.
**அம்மா:** உண்மையா மகன்....? எனக்கு மிக்க மகிழ்ச்சி.

**පුතා:** **මට විදුහල්පතියි ගුරුවරුයි ප්‍රශංසා කළා.**
மட்ட விதுஹல்பதிய் குருவருய் ப்ரஷங்சா களா.
**மகன்:** என்னை அதிபரும் ஆசிரியர்களும் பாராட்டினார்கள்.

**අම්මා:** **මගේ හොඳ පුතා. තාත්තාටත් හරි සතුටු හිතෙයි.**
மகே ஹொந்த புதா. தாத்தாடத் ஹரி சதுட்டு ஹிதெய்.
**அம்மா:** என்னுடைய நல்ல மகன். அப்பாவும் மிகவும் மகிழ்ச்சியடைவார்.

## பயிற்சிகள்

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. நீங்கள் எங்கே?
   ..................................................
2. பெறுபேறுகள் வந்தன.
   ..................................................
3. எனக்கு மிக்க மகிழ்ச்சி.
   ..................................................

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ශිෂ්‍යත්ව ............... ආවා.
2. ............... පාඩම් කළානේ.
3. මට හරි ....................






இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற வினா வாக்கியங்கள், உடன்பாடு வாக்கியங்கள் மற்றும் எதிர்மறை வாக்கியங்கள் ஆகிய மூன்றையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) விமால் தனது தேநீரைக் குடித்தானா? (வினா)
Did Vimal drink his tea? (Interrogative)

(ஆ) ஆம், அவன் தனது தேநீரைக் குடித்தான். (உடன்பாடு)
Yes, he drank his tea.(Affirmative)

(இ) இல்லை, அவன் தனது தேநீரைக் குடிக்கவில்லை. (எதிர்மறை)
No, he did not drink his tea. (Negative)

* Did Vimal drink?
  விமால் குடித்தானா?
* Yes, he drank.
  ஆம், அவன் குடித்தான்.
* No, he didn't drink.
  இல்லை, அவன் குடிக்கவில்லை.

(ஈ) அம்பிகா பை ஒன்று கொண்டுவந்தாளா? (வினா)
Did Ambiga bring a bag? (Interrogative)

(உ) ஆம், அவள் பை ஒன்று கொண்டுவந்தாள். (உடன்பாடு)
Yes, she brought a bag. (Affirmative)

(ஊ) இல்லை, அவள் பை ஒன்று கொண்டுவரவில்லை. (எதிர்மறை)
No, she did not bring a bag. (Negative)

* Did Ambiga bring?
  அம்பிகா கொண்டுவந்தாளா?
* Yes, she brought.
  ஆம், அவள் கொண்டுவந்தாள்.
* No, she didn't bring.
  இல்லை, அவள் கொண்டுவரவில்லை.

(எ) நீ யானையைப் பார்த்தாயா? (வினா)
Did you see the elephant? (Interrogative)

(ஏ) ஆம், நான் யானையைப் பார்த்தேன். (உடன்பாடு)
Yes, I saw the elephant. (Affirmative)

(ஐ) இல்லை, நான் யானையைப் பார்க்கவில்லை. (எதிர்மறை)
No, I did not see the elephant. (Negative)

* Did you see?
  நீ பார்த்தாயா?
* Yes, I saw.
  ஆம், நான் பார்த்தேன்.
* No, I didn't see.
  இல்லை, நான் பார்க்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபத் திருநாளாம் தீபாவளி

ஐப்பசி மாதத்திற்கு துலா என்ற ஒரு பெயரும் உண்டு. துலா என்றால் தராசு. தராசு எவ்வாறு நடுநிலையாக நிற்குமோ அதேபோன்று தனக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்றில்லாமல் நியாயமாக எவர் இருக்கின்றாரோ அவரே நீதிமான். அவ்வாறே தீபாவளி நன்னாளும் நீதியை எடுத்துக்கூறுகின்றது. பெற்ற மகன் என்றும் பாராமல் அநியாயம் செய்த நரகாசுரனை திருமாலும் சத்தியபாமாவும் இணைந்து அழித்தனர். இந்த நீதியும் மனஉறுதியும் அனைவரிடமும் ஏற்பட வேண்டும் என்பதே தீபாவளி எமக்கு உணர்த்தும் பாடம்.

வருடந்தோறும் பண்டிகைகள், விழாக்கள் கொண்டாடப்பட்டாலும் தீபாவளிக்கென்று தனிச் சிறப்பு உண்டு. எண்ணெய்க் குளியல், புத்தாடை அணிதல் என்பன புராணங்களிலேயே கூறப்பட்டுள்ளமைதான் அதன் சிறப்பு.

ஒருநாள் தீர்க்கதமஸ் என்ற முனிவருக்கு தீபாவளியை இப்படிக் கொண்டாடுவதன் அவசியம் என்ன என்ற சந்தேகம் உண்டாயிற்று. உடனே, அவர் சனாதன முனிவரிடம் சென்று கேட்டார். அதற்கு அவர், “துன்பம் என்ற இருளை அகற்றி வாழ்வில் ஒளி வீசும் விரதமே தீபாவளி. துலா (ஐப்பசி) மாதம் தேய்பிறையில் திரயோதசி அன்று மகாபிரதோஷ



பூஜை செய்து யமதீபம் ஒன்றை ஏற்றிவைக்க வேண்டும். எத்தனையோ பூஜைகள் செய்கின்றோம். ஆனால், யமனுக்கு தீபம் ஏற்றி யமனை பிரார்த்திப்பதில்லை. இந்த பூஜையில் யமதர்ம ராஜாவை மனதால் பிரார்த்தனை செய்து அகாலமரணம் சம்பவிக்காமல் காத்திடும்படி வேண்டிக்கொள்ள வேண்டும். மறுநாள் நரக சதுர்த்தசி அன்று நரகத்திற்கு செல்லாமல் இருக்கவும், ஏற்கனவே நரகத்தில் துன்பப்படுபவர்கள் அங்கிருந்து விடுபடவும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். எண்ணெய், அரப்புத்தூள், சந்தனம், குங்குமம், மலர்கள், நீர், புத்தாடை, இனிப்புப்பண்டங்கள், தீபம், மருந்து, நெருப்புப்பொறி ஆகியவற்றிற்கு பூஜை செய்ய வேண்டும். எண்ணெயில் லட்சுமிதேவியும், அரப்புப் பொடியில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமாதேவியும், குங்குமத்தில் கௌரியும், புஷ்பத்தில் மோகினிகளும், நீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும், இனிப்புப் பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்புப் பொறிகளில் ஜீவாத்மாவும் எமக்கு அருள்பாலிப்பார்கள். இவற்றிற்கு கற்பூர ஆரத்தி காட்டி வணங்கினால், அனைவரும் மனம் குளிர்ந்து ஆசி வழங்கி எமது குடும்பத்தாரை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துவருவார்கள்” என்று கூறினார்.

அந்தவகையில், இவ்வருடம் நொவெம்பர் 2 ஆம் திகதி தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகின்றது. மகிழ்ச்சிக்காக புத்தாடை அணிந்து, பண்டங்களை உண்பது மட்டும் தீபாவளி அல்ல; தீபாவளி தினத்தில் செய்யும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அர்த்தம் உள்ளது.

தீபாவளித் திருநாளில் புத்தாடை, பட்டாசு, பலகாரங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வாறே எண்ணெய்க் குளியலும் முக்கியத்துவம் பெறுகின்றது. எண்ணெய் தேய்த்து குளிப்பதற்கு ‘கங்காஸ்நானம்’ எனும் பெயரும் உண்டு. அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்தால் எமது பாவங்கள் அனைத்தும் போய்விடும் என்பது நம்பிக்கை. கிருஷ்ணபரமாத்மா நரகாசுரனை அழித்த தீபாவளித் திருநாளில் சிவபெருமான் உலகிலுள்ள நீர்நிலைகள் அனைத்திற்குமே கங்கையின் புனிதத்தை வழங்குகிறார் என்பது ஐதீகம். இந்த ஐதீகத்தின்படி, அன்று நம் வீட்டில் உள்ள கிணறு, குழாய் ஆகியவற்றில் வரும் நீர் அனைத்தும் கங்கை நீராகவே நோக்கப்படும். இதனால்தான், தீபாவளியன்று காலையில் நீராடுவதை ‘கங்காஸ்நானம்’ என்று சொல்கிறார்கள். தீபாவளியன்று சூரிய உதயத்துக்கு நான்கு நாழிகைக்கு முன் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். நான்கு நாழிகை என்றால் 96 நிமிடங்கள். அதாவது 6 மணிக்கு சூரிய உதயம் நிகழ்ந்தால், அதிகாலை 4.20 க்கு நீராடிவிட வேண்டும்.

தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக் குளித்ததும், புதிய ஆடைகளையும், பலகாரங்களையும் வைத்து வணங்குவது வழக்கம். இது முன்னோர்களுக்கு (பிதுர்களுக்கு) படைக்கும் படையல் ஆகும். தீபாவளியன்று பிதுர்கள் வீட்டிற்கு வருவதாகவும் ஓர் ஐதீகம் உண்டு. நரகத்தில் இருப்பவர்கள்கூட அன்று விடுதலையாகி வீடுகளுக்கு வருவர்கள் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இதனால்தான் ‘நரக சதுர்த்தி’ என்ற பெயரும் ஏற்பட்டது.

இருள் அகன்று ஒளியேற்றக்கூடிய தீபாவளித் திருநாளை நாம் அனைவரும் இனிதே வரவேற்றுக் கொண்டாடி மகிழ்வோம்.

***அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்***


வெல்லுங்கள்

விஜய் உடன் Top News வழங்கும் வாரம் ஒரு iPod...




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் ‘விஜய்’ பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ‘Top News’ SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை ‘விஜய்’ பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

‘Top News’ SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை ‘விஜய்’ கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 06.11.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




09.10.2013 ‘Top News’ கேள்விக்கான விடை:
தேக்கு-வேம்பு
iPod பரிசை பெறுபவர் :
கே.அருண்குமார்,
208, பூண்டிமாதா வீதி,
எமில்நகர், மன்னார்.

விஜய் – Top News

இவ்வார கூப்பன் (30.10.2013)

விடை: ..............................
பெயர்: ..............................
வீட்டு முகவரி: ..............................
..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
வயது: ..............................
தொ.பே.இல: ..............................

அனுப்ப வேண்டிய முகவரி:

iPod பரிசுப் போட்டி,
‘விஜய்’
த.பெ.இல: 2037,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுள்ள எறும்பு



ஒரு சமயம் ஓர் எறும்பு குளம் ஒன்றில் விழுந்துவிட்டது. அது நீரில் மூழ்கும் நிலையில் இருந்தபோது, கரையில்





மரம் ஒன்றில் உட்கார்ந்திருந்த புறா ஒன்று அந்த எறும்பைப் பார்த்துவிட்டது. உடனே மரத்தில் இருந்த



இலையொன்றைப் பறித்து எறும்பின் அருகே போட்டது. எறும்பும் சிறிது முயற்சி செய்து அந்த இலையின் மேல்



ஏறிக்கொண்டது. நீரில் மிதந்து சென்ற அந்த இலையின் மேல் உட்கார்ந்தவாறே எறும்பு பத்திரமாகக் கரையை அடைந்தது. புறாவின் கருணை உளளத்தாலும், உதவியாலும் எறும்பும் உயிர் தப்பிக்கொண்டது.

சில நாட்களின் பின்னர் ஒருநாள் எறும்பு காட்டில் தன் இரையைத் தேடி அலைந்து கொண்டிருந்தது. அப்போது தனக்கு உதவிய புறா பக்கத்து மரக்கிளையில் உட்கார்ந்திருந்ததை எறும்பு பார்த்தது. அந்த எறும்பு புறாவை அழைக்க நினைத்தபோது அங்கு ஒரு மனிதன் கையில் துப்பாக்கியுடன் புறாவை நோக்கி குறி வைத்துக்கொண்டிருந்ததை எறும்பு பார்த்துவிட்டது. எறும்புக்கு புறாவின் உயிர் ஆபத்தில் உள்ளது என்று தெரிந்துவிடவே, அது வேகமாகச் சென்று அந்த மனிதனின் கையில் ஏறி நறுக்கென்று கடித்துவிட்டது. இதனால்,



அந்த மனிதன் வலி தாங்க முடியாமல் தன் குறியை தவறவிட்டுவிடவே, புறா அங்கிருந்து பறந்து சென்று உயிர் தப்பியது. இவ்வாறாக எறும்பு புறாவுக்கு உதவி செய்து தன் நன்றியை வெளிக்காட்டிவிட்டு மகிழ்வுடன் அங்கிருந்து சென்றது.

பாபு பவித்ரா,
புனித அந்தோனியார் மகளிர் கல்.,
கண்டி.




மானிடரில் மணம் வீசும் தமிழ்
மனித நேயத்தைக் கற்றுத்தரும்!

இனிமையான நாதம் எழுப்பும் தமிழ்
இன்பமான வாழ்வை மீட்டுத்தரும்!

வற்றா ஊற்றான தமிழ்
வந்தாரை வாழவைக்கும்!

ஆழியிலேயே மேடை
அமைக்கும் தமிழ்
சங்கச் சான்றோரிலும் மேடை
அமைக்கும்!

விண்மீன் கூட்டத்தில் சிரிக்கும் தமிழ்
பௌர்ணமியில் முத்தாரமிடும்

எழுதுகருவியை முத்தமிடும் தமிழ்
எம்மவரில் ஓவியமாய் திகழும்!

வையகத்திலேயே
தழைத்தோங்கும் தமிழ்
மனிதம் மனிதத்தை மீட்டுத்தரும்!

ம.குலேந்திரன்,
கொலப்பத்தனை.

# தேயிலைப் பயிர்ச்செய்கை

★ இலங்கையில் எப்போது, யாரால் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது?

1867 இல் பிரித்தானியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் டெய்லர் என்பவரால்

★ இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

தலவாக்கலை

★ அதிகமாகத் தேயிலை உற்பத்தி நடைபெறும் மாவட்டம் எது?

நுவரெலியா



★ தேயிலை உற்பத்தி நடைபெறும் ஏனைய மாவட்டங்கள் எவை?

கண்டி, பதுளை,மாத்தளை

★ தேயிலைப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமையால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை?

1. அதிகளவு வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடிகின்றமை.
2. நெடுஞ்சாலைகள் நிறைந்த வீதிப்போக்குவரத்தும், புகையிரதப்போக்குவரத்தும் வளர்ச்சியடைந்துள்ளமை.
3. வங்கிச்சேவைகள் ஏற்பட்டமை.
4. தொடர்பாடல் வசதிகள் உருவாகியமை.
5. மக்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கின்றமை.


ரிஸ்லா ரைஸ்தீ[illegible],
ஹிஸ்புல்ல மத்.கல்., குருணா[illegible].

# ஓசோன் படை



படை மண்டலத்தின் ஒரு பகுதியாக ஓசோன் படை அமைந்துள்ளது. இப்படையானது சூரியனிலிருந்து வருகின்ற ஊதா நிறக் கதிர்களை (Uv-A, Uv-B, Uvc) தரைக்கு வரவிடாது உறிஞ்சிக் கொள்வதனால் இப்படையில் உயர் வெப்பநிலை நிலவுகின்றது.

தற்போது இந்தப் படை அருகிச் சென்று வருவது பாரிய பிரச்சினையாக உள்ளது. ஓசோன் படை அருகிச் செல்லல் என்பது, வளிமண்டல மாசடைவினால், ஓசோன்படை பாதிப்பிற்குட்பட்டு ரசாயன மாற்றங்கள் காரணமாக பிறவடிவங்களுக்கு உட்படுதல் அல்லது




செயல் இழத்தல் எனலாம். அவ்வாறே, குளோரின் ($Cl_2$), பிறவுன்ஸின் ($Br_2$), குளோரோ ஃபுளோரோ காபன் (CFC) என்பனவாக மாற்றமடைகின்றன. மனிதனால் வெளியிடப்படும் பல்வேறுபட்ட வாயுக்கள் மற்றும் மாசுக்களினால் துருவப்பகுதிக்கு அருகாமையில் பாரிய ஓசோன் துவாரம் ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. ஓசோன் படை அருகிச் செல்வதால், சருமப்புற்றுநோய் ஏற்படுதல், பயிர்களின் உற்பத்தி பாதிப்படைதல், புவி வெப்பமடைதல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நாதிரா வஸ்னா,
இ.ஜெய்லானி தேசிய பாடசாலை,
பலாங்கொடை.


## உங்கள் அறிவுக்கு...

- இமாலய மலைத்தொடர் உலகின் புவிச்சரிதவியல் சுவர்க்கமாகும்.
- சீனாவின் துயரம்/புலம்பல் என்ற பெயரால் குவாங்கோ நதி அழைக்கப்படுகின்றது.
- ஆசியாவின் மிக நீளமான நதி யாங்சிக்கியாங்.
- சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங் என்பன ஆசியாவின் நான்கு சிறுத்தைகள் எனப் பெயர் பெற்று விளங்குகின்றன.
- சீனா 'ஆசியாவின் உறங்கும் ராட்சதன்' என அழைக்கப்படுகிறது.

அஃப்ரா அன்வர்,
M.G.N. கல்லூரி, தாகா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 சிறிய விலங்குகளை அவற்றின் தாய் விலங்குகளுடன் இணைக்க



## 5 எதிர்ப்பதம் தருக

1. சிறுமை - ..............................
2. மதிப்பு - ..............................
3. சாதகம் - ..............................
4. நிராசை - ..............................
5. குவிவு - ..............................

## 4 பொருத்தமான விடையில் கோடிடுக

1. மரக்கறி வகையில் அடங்காதது;
   * வெண்டிக்காய்
   * பீட்ரூட் * தேங்காய்
2. 'சார்க்' அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை;
   * 7 * 8 * 12
3. ஒலிம்பிக் போட்டியின் தாயகம்;
   * ரோம்
   * கிரேக்கம் * அமெரிக்கா
4. ஐம்புலன்களில் அடங்காதது;
   * கண் * சுவை * ஓசை
5. உலகின் உயரமான சிகரம்;
   * கிளிமஞ்சாரோ
   * ஃபூஜி * எவரெஸ்ட்

## 3 கீழுள்ள கட்டத்தில் பெயரிடப்பட்டுள்ளவற்றை பிரதான படத்திலுள் இனங்கண்டு நிறந்திட்டுக




## அறிவுக்கு விருந்து - 438 விடைகள்

போட்டி: 02



போட்டி: 03



போட்டி: 04

1. சீமான் - சீமாட்டி
2. மாணவி - மாணவன்
3. பூட்டி - பூட்டன்
4. இடையன் - இடைச்சி
5. பிக்கு - பிக்குணி

போட்டி: 05

சிங்கராஜ வனம்





தயாரிப்பு - ஸாரா


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.11.06 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 441
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## 1 இடைவெளிகளை நிரப்புக



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 57




### மேலிருந்து கீழ்

01. பனை மரத்தை இப்படியும் அழைப்பர்.
02. வஞ்சகம்.
03. (பொதுவாக) ஒரு பொருளை 'வாங்கு'/'தூக்கு' என்பதை இவ்வாறும் கூறலாம். (தலைகீழ்)
04. துன்பம்.
09. கல்லில் செதுக்கப்படுவது. (தலைகீழ்)
10. துணி நெய்வதற்கான சாதனம். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. சிறுவர்கள் விரும்பிச் சுவைப்பது.
03. யாது.
05. காற்றில் பறந்து மேலெழும்.
06. மன்மதன் மனைவி. (மாறியுள்ளது)
07. சிரசு.
08. சுவை.
10. கருணை.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 56 விடைகள்



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 438 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
ஏ.வி.சுகிவர்ணன், ஹட்டன்.

போட்டி: 02
ஆ.பிரபுசங்கர், கொழும்பு-06.

போட்டி: 03
ஆர்.யதுசன், கல்லடி.

போட்டி: 04
ஸஃப்வா அஸ்லம், மல்வானை.

போட்டி: 05
பஸரியா, கலேவெல.

பாராட்டுப் பெறுவோர்:

* நாஸிப் ஸைத், கஹடோவிட்ட.
* த.மதுறன், புதுக்குடியிருப்பு.
* எஃப்.ஸப்ரா, ஏறாவூர்-02c.
* பாபு பவித்ரா, கண்டி.
* எஃப்.நிப்லா, பேருவளை.
* எஃப்.ஹன்ஸா, புத்தளம்.
* எஸ்.டெரிக், மட்டக்களப்பு.
* இ.நிறோஜன், தெல்லிப்பளை.
* பி.மதுஷனி, திவுரும்பிடிய.
* மு.அஸாம், மூதூர்-05.

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்ஸிஸ் நெட்வேர்க் ஒழுங்கு செய்திருந்த 'இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்' எனும் தொனிப்பொருளிலான இளைஞர், யுவதிகளுக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் இலகுவாக தொழில் வாய்ப்பினை அல்லது சுயதொழிலினை மேற்கொள்ளும் வகையிலான பயிற்சிக் கருத்தரங்கொன்று சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் வின்ஸிஸ் நெட்வேர்க் பணிப்பாளர் சியாம் ஆப்தீன் சான்றிதழ்களை வழங்குவதைக் காணலாம்.

# வின்ஸிஸ் நெட்வேர்க் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு






விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



வெலிகாமம் கோட்டகொடையைச் சேர்ந்த ருதைன்-ருக்ஸானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மது ருதான், தனது பிறந்தநாளை 30.10.2013 ஆகிய இன்று கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ரும்தா)



வியாங்கல்லையைச் சேர்ந்த பாத்திமா றுஷ்பா-மொஹமட் பஸ்ரின் தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஸய்னா, தனது முதலாவது பிறந்தநாளை 01.11.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.



மன்னார் சிலாவத்துறையைச் சேர்ந்த றயீசுத்தீன்-றழீனா பேகம் தம்பதியரின் செல்வப் புதல்வன் முகம்மது அஸாம், தனது எட்டாவது பிறந்தநாளை 01.11.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ஆர்.எம்.அஸ்மி)



வவுனியா-பூவரசங்குளத்தைச் சேர்ந்த காந்திராஜா-ஜீவராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் டனுசன், தனது பதினான்காவது பிறந்தநாளை 04.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



சாய்ந்தமருதைச் சேர்ந்த இப்றாஹீம்-முபிதா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா, தனது ஆறாவது பிறந்தநாளை 27.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: M.I.M ஸியாத்)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.நஸ்ரா,
கெகுனுகொல்ல தே.பாட.,
கெகுனுகொல்ல.



ஆர்.பாத்திமா,
அல்-அஷ்ரக் ம.வித்., தல்கஸ்பிடிய.



றொ.கரிஸ்குமார்,
அம்பலவன் பொக்கணை ம.வித்.,
முல்லைத்தீவு.



அஷ்பா பாருக்,
மே/கம் தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாட.,
திஹாரிய.



எம்.சாகிரா றஹ்மத்,
அல்-அக்கீல் ம.ம.வித்.,
கொட்டியாகும்புர.



ரைஹான் சலாஹுதீன்,
அந்நூர் மத்.கல்., பாணகமுவ.




ஹஸ்னா ஹுசைன்,
சாஹிரா கல்., மாவனல்லை.



சி.நிர்மல்,
டயகம மேற்கு இல-1 த.வித்.,
டயகம.


# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...



1874 இல் ஹேக்கல் வரைந்து வெளியிட்ட மீன் (F), ஒருவகை பல்லி (A), ஆமை (T), கோழி (H) ஆகியவற்றின் கரு வளர்ச்சி வரைபடங்கள் சில...

'ஏர்ன்ஸ்ட் ஹென்றிச் ஃபிளிப் ஒகஸ்ட் ஹேக்கல்' என்ற இயற் பெயரையுடைய ஜேர்மனிய ஓவியரான இவர், 'ஏர்ன்ஸ்ட் ஹேக்கல்' என்ற பெயரிலேயே உலகளவில் அறியப்படுகின்றார். *1834* ஆம் ஆண்டு பெப்ரவரி *16* ஆம் திகதி ஜேர்மனியின் 'Potsdam' எனும் நகரில் பிறந்த இவர், பிற்காலத்தில் ஓவியராக மாத்திரமன்றி, சிறந்த உயிரியலாளராகவும் இயற்கையியலாளராகவும் மருத்துவராகவும் பேராசிரியராகவும் பிரசித்திபெற்றார். ஆயிரக்கணக்கான புதிய இனங்களைக் கண்டுபிடித்து, விளக்கமளித்து, அவற்றுக்குப் பெயர்களையும் சூட்டியுள்ளார். அத்துடன், எல்லா உயிரினங்களுடனும் தொடர்புடைய இனவழி அட்டவணையையும் (Genealogical tree) உருவாக்கியதோடு, உயிரியலில் பல சொற்களையும் அறிமுகப் படுத்தியுள்ளார்.

இவரது ஓவியங்கள் எனும் போது, அவை பெரும்பாலும் உயிரியலுடன் தொடர்புடையதாகவே



ஏர்ன்ஸ்ட் ஹேக்கல்
(1834-1919)

அமைந்துள்ளன. அந்தவகையில், ஓர் ஓவியராக இவர், *100* இற்கும் மேற்பட்ட விலங்குகள் மற்றும் கடல் படைப்பினங்கள் குறித்த பல்வர்ண ஓவியங்கள் மற்றும் விளக்கங்களுடனான நூலொன்றை 'Kunstformen der Natur' (Art Forms of Nature- இயற்கை கலை வடிவங்கள்) எனும் பெயரில் வெளியிட்டுள்ளார். மேலும், உயிரியலுடன் தொடர்புடைய ஏராளமான படக் குறிப்புக்கள், விளக்கப்படங்கள், படக்குறிப்புக்களுடனான நூல் என ஏராளமானவற்றையும் வெளியிட்டுள்ளார். *1915* ஆம் ஆண்டு இவரது மனைவி எக்னஸ் ஹஸ்க்கி மரணத்தைத் தழுவினார். அதன் பின்னர், ஹேக்கல் தனது ஒரு காலும் ஒரு கையும் முறிவடைந்த நிலையில், படிப்படியாக உடல் பலவீனமடைந்து, *1919* ஆம் ஆண்டு ஒகஸ்ட் *9* ஆம் திகதி ஜேர்மனியின் Jena எனும் நகரில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

-ஜீநு



*Kunstformen der Natur* எனும் நூலில் உள்ள கடல் சாமந்தி வகைகளின் படங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்



## டேவிட் பஷ்னெல் (David Bushnell)

1775 - அமெரிக்கா




நீர்மூழ்கிக் கப்பல்




## வில்லியம் ஓஃக்ட்ரெட் (William Oughtred)

1622 - பிரித்தானியா



அடிமட்டம்



## பார்த்திலேமி திமோனியர் (Barthelemy Thimonnier)

1829 - ஃப்ரான்ஸ்



தையல் இயந்திரம்



## வோல்டர் ஹண்ட் (Walter Hunt)

1849 - அமெரிக்கா




பூட்டூசி



## எர்னோ ரூபிக் (Erno Rubik)

1974 - ஹங்கேரி



ரூபி க்யூப்



## தோமஸ் அல்வா எடிசன் (Thomas Alva Edison)

1879 - அமெரிக்கா



மின்குமிழ்

(தொடரும்)

# உயிரியல் வகைப்பாடு

## கனகாம்பரம்



கனகாம்பரம் *(Crossandra infundibuliformis)* எனும் இத்தாவரம் *Acanthaceae* குடும்பத்தைச் சேர்ந்தது. குறுஞ்செடி வகையைச் சேர்ந்த இத்தாவரத்தை வீடுகளில் அழகுக்காகவும், வணிகத்திற்காகவும் வளர்க்கிறார்கள். இம்மலர்த்தாவரம் தென்னிந்தியா, இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் காணப்படுகிறது. இதன் சிறப்பம்சம் அதன் மலர்கள் செம்மஞ்சள், இளஞ்சிவப்பு, மஞ்சள் போன்ற கண்ணைக் கவரும் வண்ணங்களில் காட்சி தருவதேயாகும். குளிர்காலத்தில் வாடிக் காணப்படுகின்ற இத்தாவரம், வெப்பமான சூழ்நிலைக்கு ஏற்ற தாவரமாகும். இத்தாவரத்தை ஆங்கிலத்தில் Firecracker Flower என கூறுவர்.

| | |
|---|---|
| *திணை (இராச்சியம்):* | தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத):* | பூக்கும் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத):* | இருவித்திலைத் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத):* | ***Asterids*** |
| *வரிசை:* | ***Lamiales*** |
| *குடும்பம்:* | ***Acanthaceae*** |
| *பேரினம்:* | ***Crossandra*** |
| *இனம்:* | ***C.infundibuliformis*** |

## பவளமல்லி



பவளமல்லி *(Nyctanthes arbor-tristis)* என்னும் இம்மரம் தென்-தென்கீழ் ஆசிய நாடுகளில் வளரக்கூடியது. இதன் மலர் தாய்லாந்து நாட்டின் காஞ்சனபுரி மாநிலத்தில் மாநில மலராக சிறப்பிடம் பெறுகின்றது. இதற்குத் தனிச் சிறப்பான நறுமணம் உண்டு. குளிர் மாதங்களில் பின்னிரவில் பூத்து விடியற்காலையில் உதிரத்தொடங்கும். இம்மரம் இருக்கும் இடமே நறுமணம் வீசும். நேரடியாக வெயிலில் அல்லது சிறிது நிழலிலும் வளர்க்கப்பட வேண்டும். இதன் இலைகள் நீள்வட்ட வடிவில் கூரான முனைகளுடையவையாகக் காணப்படுகின்றன. கிளை நுனிகளில் பூக்கும் இதன் பூக்கள் வெண்ணிறமாகவும் பவள நிறத்தில் காம்பைக் கொண்டவையாகவும் உள்ளன. இதனைப் போலவே இரவில் பூக்கும் இன்னொரு தாவரம் மரமல்லி ஆகும். அதன் அறிவியல் பெயர் *Millingtonia hortensis*

| | |
|---|---|
| *திணை (இராச்சியம்):* | தாவரம் |
| *பிரிவு:* | பூக்கும் தாவரம் |
| *வகுப்பு:* | மூவடுக்கிதழிகள் |
| *வரிசை:* | ***Lamiales*** |
| *குடும்பம்:* | ***Oleaceae*** |
| *பேரினம்:* | ***Nyctanthes*** |
| *இனம்:* | ***N.arbor-tristis*** |

(தொடரும்)

## தாழை மலர்



தாழை மலர் *(Pandanus fascicularis)* தற்காலத்தில் தாழம்பூ என அழைக்கப்படுகிறது. வழுவழுப்பான மரத்தை வாழை என்பது போன்று தாழ்ந்து தொங்கும் மடல்பூவைத் தாழை என்கின்றனர். நீர்நிலைகளின் கரைகளில் இவை செழித்து வளரும். கைதை என்னும் மலரும் இதன் இனம். கைதை மேட்டுநிலங்களிலும் மழைநீர் வளத்திலும். கடற்கரை மணல்வெளியிலும் வளரும். தாழை என்பது சூடும் பூ. கைதை என்பது நிழல் தரும் மரமுமாகும்.

| | |
|---|---|
| *திணை (இராச்சியம்):* | நிலைத்திணை |
| *(தரப்படுத்தப்படாத):* | பூக்கும் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத):* | ஒருவித்திலையி |
| *வரிசை:* | ***Pandanales*** |
| *குடும்பம்:* | ***Pandanaceae*** |
| *பேரினம்:* | ***Pandanus*** |
| *இனம்:* | ***P.Fascicularis*** |

## தாமரைப் பூ



தாமரை ஒரு நீர்வாழ் பல்லாண்டுத் தாவரம். இதன் அறிவியல் பெயர் *Nelumbo nucifera* என்பதாகும். பண்டைய எகிப்து நாட்டில் நைல் நதிக் கரையோரங்களில் பரவலாகக் காணப்பட்ட தாமரை, எகிப்தியர்களால் புனிதமானதாகப் போற்றப்பட்டதுடன், வழிபாட்டுக்கும் பயன்பட்டது. தாமரையின், பூக்கள், இதழ்கள் என்பவை அக்காலச் சமயத்துறை மற்றும் கட்டடக்கலை அலங்காரங்களிலும் காணப்படுகின்றன. எகிப்திலிருந்து அசிரியாவுக்குப் பரவிய தாமரை அங்கிருந்து, பாரசீகம், இந்தியா, சீனா முதலிய நாடுகளுக்குப் பரவியதாகவும் கூறப்படுகின்றது.

| | |
|---|---|
| *திணை (இராச்சியம்)* | *: தாவரம்* |
| பிரிவு | : மெக்னோலியோபைட்டா |
| வகுப்பு | : மெக்னோலியோப்சிடா |
| வரிசை | ***: Proteales*** |
| குடும்பம் | ***: Nelumbonaceae*** |
| பேரினம் | ***: Nelumbo*** |
| இனம் | ***: N.nucifera*** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1995

**18 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1995**
**Netherlands**

28,960 சாரணர்கள்



Dronten

166 நாடுகள்

ஒகஸ்ட் 1- 11

18 ஆவது உலக சாரணர் ஜம்போரி 1995 ஆம் ஆண்டு Netherland, Dronten இல் நடைபெற்றது. 28,960 சாரணர்கள் 166 நாடுகளில் இருந்து இங்கு வருகை தந்திருந்தார்கள். இதில் சாரணர், சாரணியர்கள் மற்றும் சாரணர் இயக்கம் மறு தோற்றம் பெற்ற நாடுகளைச் சேர்ந்தோரும் மகிழ்வுடன் கலந்து கொண்ட சாரணர் புகழ்பாடும் ஜம்போரியாகவும் அமைந்தது. அத்துடன், 'எதிர்காலம் இப்பொழுது' என்ற கருத்தை அடிப்படையாகக்கொண்ட ஜம்போரி நிகழ்வாகவும் திகழ்ந்தது.

ஜம்போரியின் நட்புக்கான விருதும், பல்வேறு மதத்தின் ஒற்றுமையும், போராட்டமும் மற்றும் இரண்டாவது உலக கிராம வளர்ச்சித் திட்டமும்







சாரணரின் உதவியோடு நடைபெற்றது. NGO மற்றும் UN இன் சிறப்பு முகவர்கள் மற்றும் UNCHR, UNICEF சார்பாளர்களும் பங்கேற்றனர். UN இன் 50 ஆவது ஆண்டு விழா UN SCOUT FORUM AND COMMUNICATION எனும் செயற்கைக் கோள் உதவியுடன், UN செயலர் Boutros Ghali என்பவர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வு நெதர்லாந்து நாட்டின் ராணி Beatrix மற்றும் அவரது கணவர் இளவரசர் Claus ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுவீடன் நாட்டு அரசர், ஜோர்டான் நாட்டு




இளவரசி Basma மற்றும் பல நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| பெலாரஸ் | 1,200 | 1989 | 1909 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)








மாத்தறை Thelijjawila Central College இல் செப்டெம்பர் 25-29 வரை இலங்கை சாரணர் சங்கத்தின் திரிசாரணர்களுக்கான 31st National Rover Moot-2013 நடைபெற்றது. இவை தொடர்பான படங்களைக் காணலாம்.

## சாரணர் தந்தை B.P கூறியவை

படகுகளின்மூலம் பயணம் மேற்கொள்கின்ற சாரணர்கள் பற்றி சாரணர் தந்தை பவெல் (B.P) அவர்கள் கூறியுள்ள ஒரு கருத்து வருமாறு;

நடந்து செல்லுதல், சைக்கிளில் செல்லுதல் ஆகியனவற்றிற்கு பதிலாக படகொன்றின்மூலம் ஆற்றுப்பகுதியை ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஆற்றில் நடந்து சென்று முகாம் அமைத்தல் ஆகியன சிறந்தவொரு



பயிற்சியாகும். ஆனாலும், நன்றாக நீந்தத் தெரியாத எவரையும் படகில் ஏற்றிக்கொள்ளக்கூடாது. படகில் பயணிப்பவர்கள் ஷேர்ட், ட்ரௌஸர், சப்பாத்து ஆகியனவற்றை அணிந்தவாறு 50 யார் தூரமாவது நீந்தக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். சிலவேளைகளில் எதிர்பாராத விபத்துக்கள் நேரலாம். ஆகையால், எல்லோரும் நீந்தத் தெரிந்தவர்களாக இருந்தால் பிரச்சினை ஏற்படாது.



## சாரணர் கைப்பணி

சாரணர்கள் குழுக்களாக செயற்படும்போது, எந்தவொரு விடயத்தையும் நேர்த்தியுடன் செய்யும்போதுதான் அவை மனதைக் கவர்வனவாக அமையும். அதன்படி, புத்தக மேசையொன்று இருக்குமாயின் அதில் அழகான பூச்சாடியொன்றை வைத்தால் நேர்த்தியாகவும் அழகாகவும் இருக்கும். இவை சாரணர்களின் சொந்தக் கைப்பணிப் பொருட்களாக இருப்பதே பெறுமதியானதாகும். இங்கு உதாரணத்திற்கு ஒரு பூச்சாடி காணப்படுகின்றது. உரித்த பாக்கின் தோல்களே, இங்கு குச்சிகளில் பொருத்திப் பூக்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பலவகையில் இவற்றை அமைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அணுசக்தி முகவரமைப்பு

'அணுசக்தி' என்பது உலகின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றுகின்றது. மறுபுறம், முழு உலகத்தையும் அழிக்கக்கூடிய ஆற்றலும் அதற்கு உண்டு. அணுசக்திப் பாவனையை ஆரம்பித்து ஒரு சில ஆண்டுகளுக்குள், சில ஆபத்தான கட்டங்களையும் சம்பவங்களையும் உலகம் எதிர்கொண்டது. இந்த அணுசக்தி ஆற்றலைப் பயன்படுத்தும் நாடுகள் எவ்வாறு அதனைக் கையாள்கின்றன என்பதனை ஆராய்வதற்காகவே 'சர்வதேச அணுசக்தி முகவரமைப்பு' உருவாக்கப்பட்டது. தற்போது வட கொரியாவும் ஈரானும் இந்த அமைப்பின் பிரதான எதி[illegible]ளாக உள்ளன.



சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் தலைமையகம், ஒஸ்ட்ரியாவின் வியன்னா நகரில் அமைந்துள்ளது.




சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் உத்தியோகபூர்வ இலச்சினை.



இந்த அமைப்பானது, ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் பாதுகாப்பு சபைக்கும் பொறுப்புக்கூற வேண்டிய ஓர் அமைப்பாகும்.

**பாதுகாப்பு சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள்**

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா

## 1953

அமெரிக்க ஜனாதிபதி டிவய்ட் டி.எயிசன்ஹவர், ஐக்கிய நாடுகள் சபையில் 'சமாதானத்திற்கான அணுசக்தி' (Atoms for Peace) என்ற தலைப்பில் உரையாற்றும் போது, அணுசக்திக் கட்டுப்பாடு தொடர்பாக வலியுறுத்திப் பேசினார்.



## 1957

ஜூலை 29 ஆம் திகதி முதல் ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் வகையில் சர்வதேச அணுசக்தி முகவரமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.



அமெரிக்க ஜனாதிபதி டிவய்ட் டி.எயிசன்ஹவர் (1953-1961)

### பணிப்பாளர் நாயகங்கள்

1957 முதல் இதுவரை பலதரப்பட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பலர், சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் பணிப்பாளர் நாயகம் என்ற பதவியினை வகித்துள்ளனர்.



- ஸ்டெர்லிங் கோல் – அமெரிக்கா (1957-1961)
- சிக்வார்ட் எக்லுண்ட் – சுவீடன் (1961-1981)
- ஹேன்ஸ் ப்ளிக்ஸ் – சுவீடன் (1981-1997)
- மொஹமட் அல்பராதி – எகிப்து (1997-2009)
- யுகியா அமானோ – ஜப்பான் (2009 - இதுவரை )

### விசேட நிகழ்வுகள்

**1970** 188 நாடுகள் அணு ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டன.

**1991** ஈராக்கில் போர் முடிவடைந்த பின்னர், அங்கு இருப்பதாகக் கருதப்பட்ட அணு ஆயுதங்கள் தொடர்பான ஆய்வுகள் நடைபெற்றன.

**1994** 20 ஆண்டுகளின் பின்பு வட கொரியா அங்கத்துவத்தை ரத்துச் செய்தது. முகவரமைப்பு தேவையற்ற விதத்தில் தமது அணுமின் நிலையங்களை சோதனையிடுவதாக வட கொரியா குற்றம் சுமத்தியிருந்தது.




**1986** உலகில் இதுவரை நிகழ்ந்த மிகவும் மோசமான அணு உலை விபத்துக்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விபத்தாக 1986 இல் உக்ரேனின் செர்னோபிளில் நிகழ்ந்த விபத்தைக் குறிப்பிட முடியும். அங்கு அணுசக்திக் கசிவினால் ஏற்பட்ட பாதிப்புகளை இன்றும் காணமுடியும்.



இந்த விபத்தில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 10,000

**1999** ஜப்பானின் 'டொக்கைமுரா' அணு நிலையத்தில் ஏற்பட்ட அவசர நிலைமைகள் காரணமாக, அவசர அனர்த்த நிலையம் ஒன்றை ஸ்தாபிக்க முகவரமைப்பு தீர்மானித்தது.

**2003** அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்ள வட கொரியா தீர்மானித்தது.

**2004** ஈரான், தனது அணுசக்தி செயற்பாடுகளின் ஒரு பகுதியினை ரகசியமாக நடைமுறைப்படுத்துவதாக குற்றம் சுமத்தப்பட்டது. ஐக்கிய நாடுகளின் தடை அமுலானது. அதே ஆண்டில், முகவரமைப்பு புற்றுநோய்க்கான சிகிச்சைகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்தது.

**2005** அணுசக்தி முகவரமைப்பின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய மொஹமட் அல்பராதிக்கு ஒக்டோபர் 7 ஆம் திகதி சமாதானத்திற்கான நொபெல் பரிசு கிடைத்தது.

**2006** வட கொரியாவின் அணுசக்தி செயற்பாடுகள் முகவரமைப்பின் சர்வதேச விதிகளுடன் பொருந்தாது என்று முகவரமைப்பு தெரிவித்தது.

**'07** வட கொரியாவின் யொன்பியொன்க் அணு மின் நிலையத்தினை மூடிவிட வேண்டும் என்று முகவரமைப்பு தீர்மானித்தது.



**2008** அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அணுசக்தி உடன்படிக்கைக்கு முகவரமைப்பு அனுமதி வழங்கியது.

**2011** ஜப்பானின் ஃபுகுஷிமா சம்பவத்தின் பின்னர், தத்தமது அணுசக்தி நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அந்தந்த நாடுகளின் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

**2012** ஐக்கிய நாடுகள் சபையானது, வட கொரியா மீது தடைகளை விதித்தது.

### உலகில் உள்ள அணு மின் நிலையங்களின் எண்ணிக்கை 436

உலகின் பல நாடுகள் தமது எரிசக்தி தேவையினைப் பூர்த்தி செய்ய அணுசக்தியினைப் பயன்படுத்துகின்றன.

| | |
|---|---|
| ஜேர்மனி | 09 |
| சுவீடன் | 10 |
| உக்ரேன் | 15 |
| பிரித்தானியா | 16 |
| சீனா | 18 |
| கனடா | 19 |
| இந்தியா | 20 |
| தென் கொரியா | 23 |
| ரஷ்யா | 33 |
| ஜப்பான் | 54 |
| பிரான்ஸ் | 58 |
| அமெரிக்கா | 103 |

### நாடுகளின் அணு ஆயுத விபரம்



| | |
|---|---|
| ரஷ்யா | 10,000 |
| அமெரிக்கா | 8,500 |
| பிரான்ஸ் | 300 |
| சீனா | 240 |
| பிரித்தானியா | 225 |
| பாகிஸ்தான் | 110 |
| இந்தியா | 80 |
| இஸ்ரேல் | 80 |
| வட கொரியா | <10 |

சுத்திகரிக்கப்பட்ட யுரேனியம், அணு ஆயுத தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுவதாக பிரதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

### ஈரானின் அணுசக்தி திட்டம்

ஈரான், ரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.




கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்னும் 45 வருடங்களில்...

# லண்டன், நியூயோர்க், பெரிஸ் நகரங்கள் அழியுமாம்...?!







இன்னும் 45 வருடங்களில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரம், பிரிட்டனின் லண்டன் பிரான்ஸின் பெரிஸ் நகரம் உட்பட மேலும் பல நகரங்கள் மனித நடமாற்றமற்ற சூனியப் பிரதேசமாக மாறிவிடக்கூடிய ஏது நிலைகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். புவி வெப்பமடைதல் அதிகரித்து வருவதன் காரணத்தினாலேயே, இந்நிலை ஏற்படக்கூடும் என்று கூறப்படுகின்றது. அதாவது, வறட்சியின் கொடுமை தாங்க முடியாமல் இம்மக்கள் நகரப்பகுதிகளைக் கைவிட்டு சட்டவிரோதமாக வேறு நாடுகளில் குடிபுகக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும் என்றும், இவ்வாறு மில்லியன் கணக்கிலான மக்கள் வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றால் பாரிய மனித அவல நெருக்கடி நிலை தோன்றக்கூடிய ஆபத்தும் இருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இதன் பிரதிபலனாக புவியிலிருந்து உயிரினங்கள் அழிவடையக் கூடிய நிலை தோன்றும் என்றும் ஆய்வாளர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

புவிவாழ் மககள் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி எனும் பெயரில் மேற்கொண்டு வருகின்ற நவீன தொழில்நுட்ப பாவனைகளால் வெளியிடப்படுகின்ற காபன் வெளியேற்றத்தின் காரணமாக, ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள துளையினால் சூரியக்கதிர் தாக்கம் நேரடியாக புவியை தாக்குவதன் எதிர்த்தாக்கமாகவே மனிதன் தனது வாழ்விடங்களை இவ்வாறு இழக்கவுள்ளான்.

இதற்கமைய, வருடத்தின் மிகக்கூடிய குளிர்காலத்தில் குளிருக்குப் பதிலாக கடும் வெப்பநிலையே தோன்றப்போவதாகவும் இத்தகைய உலகில் வாழ்வதற்கு இப்போதே அனைவரும் ஆயத்தமாக வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

'ஹவாய்' பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வின்மூலமே இந்த உண்மைகள் தெரியவந்துள்ளன.

நியூயோர்க், வொஷிங்டன் நகரங்களில் 2047 ஆம் ஆண்டில் இதன் பாதிப்பை உணரமுடியும். இதனைத் தொடர்ந்து சில காலங்களுக்குள் லொஸ் ஏஞ்சலிஸ், டெட்ரோயிட், ஹுஸ்டன், சிக்காகோ, சியடெல், ஒஸ்டின் மற்றும் டலாஸ் ஆகிய பிரதேசங்களிலும் உஷ்ண நிலை அதிகரித்து மனிதன் அங்கு வாழ முடியாத நிலையை தோற்றுவித்துவிடும் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நவீனத்தை நோக்கிச் செல்லும் மனிதன் அந்த நவீனத்தின் காரணமாக தனது வாழ்விடத்தையே இழக்கும் நிலைக்கு ஆளாகியிருப்பதற்கு மனிதனின் தவறான செயல்களே காரணம் என்பதை இது உணர்த்துகின்றதல்லவா?

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 30, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org